

# பன்னீர்க் குடமும் சந்தனப் போர்வையும்

மணிப்புலவர் மருதூர் ஏ. மஜீ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு

[illegible]

9/4/93

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னீர்க் கூதலும்
# சந்தனப் போர்வையும்

(கவிதை)

மணிப்புலவர்
**மருதூர் - ஏ - மஜீத்**
B. A. (Hons) S. L. E. A. S.
பிரதிக் கல்விப் பணிப்பாளர்.

வெளியீடு
**மருதூர் வெளியீட்டு பணிமனை**
**436, பழைய சந்தை வீதி,**
**சாய்ந்தமருது - 01.**
**கல்முனை.**
**ஸ்ரீ லங்கா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது
மருதூர் வெளியீட்டு பணிமனை வெளியீடு
டிசம்பர்:- 1992,

**பன்னீர்க் கூதலும்**
**சந்தனப் போர்வையும்** (கவிதை)

உரிமை:- மருதூர் - ஏ - மஜீத்
B. A. (Hons) S. L. E. A. S.
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
அச்சு:- எவசைன் பிரிண்டர்ஸ், சாய்ந்தமருது.
விலை:- [redacted]/- 88/-

Panneer Koothalum
Santhanap Pourvaiyoom.
(Poems)

Author:- Maruthur - A - Majeed
B. A. (Hons) Ceylon S. L. E. A. S.
Deputy Director Of Education.
Publishers:- Maruthur Publications
December 1992
Printers:- Evershine Printers, Sainthamaruthu.
Price.- [redacted]/- 88/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனச்சுவடு

என்
மனத் தோட்டத்தில் பூத்த
கவிதைப் பூக்களை
கணக்காளர்
முகைதீன் பாவா
எனும் எனது
மாணவருக்கு
காணிக்கைப் பூக்களாக்கினேன்
காரணம்
பூத்தது அனைத்தும்.
நன்றிப் பூக்களே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளீடு

1. வெளியீட்டுரை

2. முடிவுரையில்லாத முகவுரை

3. ஐம்பதுகளில்

4. அறுபதுகளில்

5. எழுபதுகளில்

6. எண்பதுகளில்

7. தொண்ணூறுகளில்

8. பாட்டுடைத் தலைவன் பிரேமதாஸ
பத்துப் பாட்டு

9. இந்நூலின் கடைசிப் பக்கம்
வேறு ஒரு நூலின் முதற் பக்கம்

10. மொட்டுக்கள்

11. மலர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

நூல் வெளியீட்டுத் துறையைப் பொறுத்தவரை நாங்கள் மலையளவு எதுவும் சாதித்துவிடவில்லை தான்.

இருந்தாலும்,

1990 டிசம்பரில், மருதூர். ஏ. ஹசனின் 'அநாமிகா' புதுக் கவிதைத் தொகுதியினையும்,

1991 டிசம்பரில், மணிப்புலவர் மருதூர். ஏ. மஜீத் அவர்களின் 'இஸ்லாத்தைப் பற்றி இதர மதத்தவர்கள்' எனும் நூலினையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1992 டிசம்பரில், இந்நூலினையும் வெளியிட்டு மனமகிழ்வெய்தினோம்.

நூல் வெளியீட்டைப் பொறுத்தவரை அள்ளிக் கொட்டாது, ஆண்டிற்கொன்று ஆவணிக்கொன்று என்று மிக மிக அரிதாகவே எமது நூல் வெளியீடு இடம் பெறுவதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றிலே தரமான நூல்கள் கிடைக்காமை, அப்படிக் கிடைத்தாலும் அச்சுப் பிரச்சினை என்பன போன்றவற்றைச் சில காரணங்களாகக் கொள்ள முடியும்.

எமது பிராந்தியத்தைப் பொறுத்தவரை நூல்கள் அச்சிட்டு வெளியிடுவதற்கென்று தனியான அச்சகம் எதுவும் கிடையாது.

கலியாண அழைப்பிதழ் அடித்து மிச்சமான நேரம் எதுவும் இருந்தால் மட்டுமே நூல்கள் அச்சிடுவதைப் பற்றி யோசிப்பார்கள்.

ஆனால், நூல்கள் அச்சிடுவதென்பது இவ்வாறு செய்யும் இடைத்தொழில் அல்ல.

நூல்கள் அச்சிடுவது ஒரு கலை.
அதற்குரிய சகல அம்சங்களும் இடம்பெறும் போது தான் அது அழகுபெறும். அந்நூல் பெறுமானம் உடையதாக மிளிரும்.

இது பற்றி இங்கு பிரஸ்தாபித்து எதுவும் ஆகப் போவதில்லை. காலம் வரும்வரை காத்திருக்க வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்க,

மணிப்புலவர் மருதூர். ஏ.மஜீத் அவர்களின் கவிதை களைத் தொகுத்து நூலாக வெளியிடும் வேலை எம்மிடம் ஒப்படைக்கப்பட்டதும், பல அச்சுக் கந் தோர்களிலும் ஏறி இறங்கி மண்ணடிவரை சென்று கடைசியாக காலடியிலேயே அச்சிடக் கிடைத்தது எவ்வளவு அலைச்சல் கொண்டாலும் நூல் அழகாக அச்சிடப்பட்டதை நினைத்து மகிழ்ச்சியடைகின் றோம்.

இதன் சார்பில் சாய்ந்தமருது எவசைன் அச்சக ஊழியர் ஜனாப் ஏ. எல். ஜாபிர் அவர்கட்கும் அதிபர் ஏ. பீர்முகம்மத் B. A. ஜனாப் யூ. எல் ஆதம்பாவா ஆசிரியர் ஆகியோருக்கும் எமது நன்றிகள்.

மலரோடு சேர்ந்த நாரும் மணம் பெறும் என்ற எண்ணம் எம்மை மேலும் மகிழ்ச்சியடையச் செய் கிறது.

மணிப்புலவரால், வெளியீட்டாளர்களாகிய எங்க ளுக்கும் பெருமையே.

எங்களின் பணி மேலும் வளர்ச்சியடைய வாசகர் களாகிய உங்களின் ஆதரவும் எமக்குத் தேவை யென்று கூறி, இந்நூல் அழகாக அச்சிட்டு வெளி வர உதவிய அனைவருக்கும் எமது நன்றிகள்.

**றிஸ்மி மஜீத்**

மருதூர் வெளியீட்டுப் பணிமனை
பழைய சந்தை வீதி,
சாய்ந்தமருது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரையில்லா முகவுரை

என் கவிதைகள்
முடிவுரையில்லாத
முகவுரைகள்.
இதனை,
இப்படியும் கூறலாம்.
ஐம்பதுகளில்
வெண்பா எனும் தேர் ஏறி
கவிதை எனும் வீதியிலே
இன்பகரமான நினைவுகளோடு
''இளசு'' எனும் பருவத்தில்
அல்லது,
மாணவன் எனும் மகுடத்தோடு
எனது
இலக்கியப் பயணத்தை
ஆரம்பித்தேன்.
முடிவில்லாத இப் பயணம்
என்னால் மட்டும்
திட்டமிட்ட ஒன்றாகச் சொல்ல முடியாது.
எங்களின்
பரம்பரை எனும் சங்கிலித் தொடரிலே
நானும் எனது வட்டத்தை
இணைத்துக் கொண்டேன் எனலாம்.
எவ்வாறு எனின்
''வசைக்கவி'' பாடிய
எனது தகப்பனோடு
நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெண்பா எனும் வட்டத்தை
இணைத்துக் கொண்டேன் எனலாம்.

வெண்பாப் பாடிய
இச் சம்பவம் பற்றி
எனது மறக்க முடியாத
இலக்கிய நினைவுகளில்
நாற்பத்தி ஆறாம், நாற்பத்தி ஏழாம்
பக்கங்களில்
எழுதியுள்ளேன்.

யாப்புப் பற்றிய அந்த
எனது கருத்தை
அடியொற்றி
அமைந்ததுவே இக் கருத்தும்.

''நான் படைத்தது இலக்கியமானால்

அது
இலக்கணத்தைப் படைக்கும்''
என்ற நம்பிக்கை எனக்குண்டு.

அது மட்டுமல்ல,
என் கவிதைகள்
என் மன உல்லாசத்திற்காக
மட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னால் எழுதியதாகக்
கொள்ள முடியாது.

அது,
மனித மனங்களுக்கு
எருவாக
அர்ப்பணிக்கப்பட்டவைகளே!
அவைகள்,
கற்பனைக் கதைகளல்ல
நிஜங்கள்.

அசிங்கத்துள்
ஒளிரும் அழகுகள்.
அநுபவமும்,
கற்பனையும் கலந்த
கொங்றீட் கலவைகள்.
எனவேதான்,

நான்
தேரிலே போகும் அரசன்
என்ற எண்ணம்
என் மனத்துள் முனைப்பாகி
அடக்கமாகியுள்ளது.
தேரைக் கண்டதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரு நாய் குரைத்தல்
சகஜமே.
இதில் ஆச்சரியப்படுவதற்கு
ஒன்றுமில்லை.

தெரு நாய் துரத்த
ஆட்கள் சேர்வர்.
அனுபவத்தோடுதான்
இதனையும் கூறினேன்.
தேரை விட்டிறங்கித்
தெரு நாயைத் துரத்துதல்
அரசனுக்கழகல்ல.
அதனால், இதை விடுத்தேன்.

நிற்க,
பன்னீர் வாசம் எனது கவிதைகள்.
பன்னீர்க் கூதல் எனது கவிதைகள்.

இரண்டும் எனது
அருமைத் தந்தையின்
மரணச் சடங்குடன்
கலந்து விட்ட
கண்ணீர்த் துளிகள்.
எனது இந்தத் தொகுதியினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐம்பதுகளில்
அறுபதுகளில்
எழுபதுகளில்
எண்பதுகளில்
தொண்ணூறுகளில்
எனத்
தொகுத்துள்ளேன்.

காரணம்,
எனது வளர்ச்சியை
அல்லது,
எனது மனப்பாங்கை
துல்லியமாய்ப் புலப்படுத்த
வாய்ப்பளிப்பதோடு,
படிப்போர் தமக்கும்
இலகுவாய் இருக்கும்
என்பதனாலேயே.

மேலும்,
என்னால் எழுதப்பட்ட
கவிதைகள் எதனையும்
தகுதி கருதியோ,
அல்லது,
வேறு ஏதேனும் காரணம் கருதியோ,
தள்ளி வைத்து விடவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீறி விட்டால்
பூனையெல்லாம்
சிங்கமாமோ?
என்ற,
ஒரேயொரு கவிதையைத் தவிர.

இந்தக் கவிதை
அசிங்க மனம் படைத்த
ஒருவன் மீது
ஆத்திரங் கொண்டு
அறம் பாடுவது போன்று
பாடப்பட்டதாகும்.

தண்டனை கொடுப்பதற்கு
இறைவன் இருக்கின்றான்
என்ற ஞானம்
என்னுள் உதித்ததும்,
அப்பாடலைத் தவிர்த்துக்
கொண்டேன்.

மேலும்,
இத் தொகுதியின்
கடைசி அத்தியாயமாக
''பாட்டுடைத் தலைவன் பிரேமதாஸா
பத்துப்பாட்டு''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் ஒரு அத்தியாயத்தைச்
சேர்த்துள்ளேன்.

நான்
இத் தொகுதியிலே,
இதனை இணைத்துக் கொண்டதற்கு
ஒரு
பின்னணியுண்டு.

அதனை,
இங்கு கூறிவைத்தல்
பொருத்தமெனஎண்ணுகின்றேன்.

இன்றைய எமது ஜனாதிபதி எண்பத்தெட்டில்
கல்முனைக்கு
விஜயம் செய்த போது,
வரவேற்புப் பாட்டொன்றினை
எழுதி வாசித்தேன். அப்போது அவர் பிரதமர்.

இஃது,
நாடாளுமன்ற உறுப்பினர்,
ஜனாப் ஏ. ஆர். மன்சூர் அவர்களின்
வேண்டுகோளின் பேரிலும்,
எனது விருப்பத்தின் பேரிலும்,
நடைபெற்றதாகும்.
எண்பத்தொன்பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதியாக உயர்வு பெற்று
வந்த போதும்,
''இருபதாம்'' நூற்றாண்டின்
இலக்கியமே வருக!''
என ஒரு வாழ்த்துப் படித்தேன்.

இதனைத் தொடர்ந்தும்
பல பாடல்களை நான்
எழுதினேன்.
இவைகளைத் தனி நூலாக வெளியிடும்
எண்ணமும் எனக்கு ஏற்பட்டது.

இதனை,
நூலாக வெளியிடுமுன்
தேசியப் பத்திரிகை யொன்றிலே
பிரசுரித்தால் புத்தகமானபின்
அறிமுகம் இலேசாக இருக்கும்
என்ற எண்ணம்
என் உள்ளத்தில்

இலேசாகத் தளிர்க்கவே
கொழும்பு சென்று
தேசியப் பத்திரிகை யொன்றின்
ஆசிரியரை அணுகி
விடயத்தைச் சொல்லி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகளை கையில்
கொடுத்ததுதான் தாமதம்
பெற்றோல் ஊற்றப்பட்ட
அடுப்பு எவ்வாறு சுவாலை
விட்டெரியுமோ
அதைவிட மோசமாக
அவரது கோபம்
சுவாலை விட்டெரிந்தது.

அத்தோடு,
''ஒரு சிலருக்கு இப்படிப்பட்ட வேலை
தொழிலாய்ப் போச்சு
பந்தம் பிடிப்பதற்கும் ஒரு அளவு வேண்டும்''
எனக் கூறிக்
கவிதைகளைத் தூக்கி வீசினார்.
தேநீர்க் கேத்தல் மூடியின் மேல்,
நீராவி
நீர்த்துளிகளாய்க் கொட்டுவது போல்
வியர்த்துக் கொட்டியது எனக்கு.
சத்தியமாக
எதனையும் எதிர்பார்த்து இதனை
நான் செய்ய வில்லை.
எழுபத்தி நாலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழைத் தோட்டத்து
நண்பர்கள் நாங்கள்.
அப்பொழுது அவர்
பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சி
உறுப்பினர்.

ஜனாதிபதியாகும் வரை
அவரது ஆற்றலையும், திறமையையும்
அவதானித்து ஆசீர்வதித்து
வந்தேன்.
ஏழைகள் மீது
அவர் கொண்டுள்ள இரக்கம்,
எனக்கு அவர்மீது
இரக்கத்தை ஏற்படுத்தியது.

அது மட்டுமல்ல,
அடிமட்டத்திலிருந்து
அதி உச்சிவரைக்கும் சென்ற
ஆப்ரகாம் லிங்கன் அவர்.
அதனால், அவரை
ஆசீர்வதித்தேன்.

ஏழைகளின் கண்ணீர் துடைக்கும்
ஒரு தலைவனைப்; பாடாவிட்டால்
நான் என்ன புலவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னே என் புலமை!
என்று கூறியவாறு
குனிந்து கவிதைகளைப் பொறுக்கிக் கொண்டு
வெளியேறி விட்டேன்.
அடுத்தநாள்,
அந்தப்பத்திராதிபர்
என்னைத் தேடித் திரிவதாகக்
கேள்விப்பட்டேன்;
அதுவும்,
வலைபோட்டுத் தேடுவதாக.
நான் சந்திக்க விரும்பவில்லை.
இதற்கு அடுத்தநாள்,
தற்செயலாக,
இருவரும் பாதையில் சந்தித்துக்
கொண்டோம்.
வலோர்க்காரமாக
அவர் என்னை,
அவரது காரியாலயத்திற்கு
அழைத்துச் சென்றார்.
நடந்ததை எண்ணி
வருந்தி
மன்னிப்புக் கேட்டார்.
இதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரிடமும் சொன்னீரா?
எனக் கேட்டு அங்கலாய்த்தார்.
தான் என்ன மனோ நிலையில்
இதனைச் செய்தேன் என
எடுத்துக் கூறி வேதனைப்பட்டார்.
நான் அவர்மீது அனுதாபப்
பட்டேன்.

தலையிடியும், காய்ச்சலும்
தனக்கு வந்தால்தானே
புரியும்.
என்ற உண்மையை
நானும் உணர்ந்து கொண்டேன்.
பின்,
பாடல்களைப் பிரசுரிப்பதாக
வாங்கிக் கொண்டார்.
இதுவரை பிரசுரிக்கப்படவில்லை.
இருந்தும்
இந்தச் சம்பவம்
இதுவரை யாரிடமும் சொல்லாது
பாதுகாக்கப்பட்டே வந்தது.
எது எப்படி இருந்தாலும்
இந்நிகழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மனதிலே பெரியதொரு
பாரமாகவே இருந்தது.
இறக்கி வைக்க இடம்
தேடினேன்
கவிதைத் தொகுதி நல்லதொரு
சுமைதாங்கியாக எனக்குப்
பட்டது.

அத்தோடு
இப்பாரத்தை வேறு ஒரு பாரமும்
சேர்த்து அழுத்திக் கொண்டிருந்தது.
அஃது
முஸ்லிம் சமய கலாச்சார
பண்பாட்டுத்துறை இராஜாங்க
அமைச்சினால் வெளியிடப்பட்ட
''தேசிய மீலாத் மலர்''
''வாழ்வோரை வாழ்த்துவோம்.''
போன்ற சில மலர்களை
தனது கைப்பட
பச்சை மையினால்
''இது புலவர் மருதூர் ஏ. மஜீத்
அவர்கட்கு'' என எழுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது ஒப்பத்தையும் இட்டு
எனது நண்பர் ஒருவர் மூலம்
இராஜாங்க அமைச்சரும்,
எனது நண்பருமான
அல்-ஹாஜ், ஏ. எச். எம். அஸ்வர் அவர்கள்
அனுப்பியிருந்தார்கள்.
அவரது தரம் குறையாத தங்க மனதை
என்றும் நான் மறவேன்.
அந்த மலரொன்றிலே
''சுதந்திரத்திற்குப் பின்
இலங்கைக் கவிதைகளில் ஏற்பட்ட
மாற்றங்கள்''
என்ற தலைப்பில் ஒரு கட்டுரை
எழுதப்பட்டிருந்தது.
இக்கட்டுரையில் மண்ணளவாயினும் எனதுபெயர்
இடம்பெறவில்லை.
இதே கட்டுரையின் ஆசிரியர்,
எழுபத்தி நான்கில்
தினகரனில் எழுதிய ''தமிழ் சிறுகதை
யாக்கத்துறையில் முஸ்லிம் கலைஞர்களின் பங்கு''
என்னும் கட்டுரையிலும்
எனதுபெயரை இருட்டடிப்புச்
செய்திருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய பெயரையும்,
எனது இலக்கிய முயற்சிகளையும்
இருட்டடிப்புச் செய்வதனால்
தனது பெயரை வளர்த்துக் கொள்ள
விரும்பும், பட்டியல் எழுத்தாளர்களில்
இவரும் ஒருவர்.
என எண்ணிப் பேசாது இருந்து விட்டேன்.
ஒருநாள்,
இராஜாங்க அமைச்சில் இவர்,
என்னிடம் ஓடி வந்து
கட்டித் தழுவி
ஆலிங்கனம் செய்து
ஏதேதோ உளறி
கடைசியில்,
''உனது கவிதைகளை மொத்தமாகப்
பார்க்கக் கிடைக்கவில்லை.
அதனால், சில வேளை பெயர் மறந்து
போய்விடுகிறது''
எனக் கூறினார்
குற்றமுள்ள மனசு
குறுகுறுத்தது
என எண்ணி விலகிக் கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டித் தழுவிய அவ்வளவு நேரமும்
பாம்பை கட்டித்தழுவிய,
பய உணர்வு எனக்கு.
என்றாலும்,
''உனது கவிதைகளை மொத்தமாகப்
பார்க்கக் கிடைக்கவில்லை''
என்ற வசனம் என் நெஞ்சை
அழுத்தியது.
அந்த அழுத்தமே
இந்தப்
'பன்னீர்க் கூதலும்
சந்தனப் போர்வையும்'

இஃது
மருதூர் - ஏ - மஜீத்

சாய்ந்தமருது - 01
கல்முனை,
சிறீலங்கா
01 - 12 - 92



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்பு

ஆதியாய், அந்தமாய்,
அனைத்துலகும் சொந்தமாய்,
வேதியாய்,
விளங்கு பொருளாய்,
ஆக்கிய, ஆன,
அவனுக்கே புகழனைத்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐம்பதுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்வீடு

- கன்னத்தை
  என்பக்கம் காட்டு

- பஞ்ச வர்ணப் பூக்கள்
  பரிமளிக்கும் தோட்டம்

- ஒன்று கூடலும்
  உபத்திரவமும்.

- கும்மியடி பெண்ணே
  கும்மியடி.

- ஆட்கள் போதும் விளையாட
  ஆரியா வாறா சேர்க்காதே.

- விழியும்
  வழியும்.

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னத்தை
# என் பக்கம் காட்டு

காக்கை கறுப்பி கருநீல மையழகி
ஆக்கை பொய்யென்று அறிந்திலையோ

- ஏக்கமேன் -

சொன்னதைக் கேள்முத்தம் சொர்க்கத்துவாசலடி
கன்னத்தை என் பக்கம் காட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சவர்ணப் பூக்கள் பரிமளிக்கும் தோட்டம்

சின்னஞ் சிறிய தோட்டம்,
சீர்மையான தோட்டம்,
பஞ்சவர்ணப் பூக்கள்,
பரிமளிக்கும் தோட்டம்.

❁

கொக்குத் தலைப் பூவும்,
கோழிக் கொண்டைப் பூவும்,
கச்சிதமாய் அங்கே,
காட்சிதரும் தோட்டம்.

❁

காலை மாலை இன்றி,
கருமை நிற வண்டு,
வான ஊர்தி போல,
வட்டமிடும் தோட்டம்.

❁

அண்ணன் தம்பி நாங்கள்,
ஆடிப்பாடி மகிழ,
எண்ணங் கொண்டே ஓடும்,
எழில் மிகுந்த தோட்டம்.

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்று கூடலும் உபத்திரவமும்

கா! கா!! என்றதும்,
கரைந்து கொண்டே எல்லோரும்,
ஒன்று கூடிவந்தென்னை,
உபத்திரவம் செய்தல் முறையாமோ?

காலை மாலை தவறாமல்,
கரைந்து கொண்டே இருப்பதுமேன்.
கடமை தவறும் மனிதரையே,
கண்டு கேலி செய்திடவோ?

ஏக்கமில்லா வாழ்க்கையதை
என்றும் நடத்தும் உங்களையே
தோட்டி என்று சொல்வதுமேன்
தொழிலால் வந்த பெயராமோ?

காக்கை உங்கள் நிறத்திலுமே,
கண்டேன் ஒற்றுமை எவரிடத்தும்.
ஏய்த்துத் திரியும் உங்கள் மேல்,
இரக்கப்படச் சொன்னாரே.

பாட்டுப் புலவன் பாரதியே,
இரக்கப்படச் சொன்னவராம்.
அவர்தம் கருத்தில் உண்மையுண்டு,
அதனால் இரக்கப்பட்டோமே.

---

மருதூர் - ஏ - மஜீத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்மியடி பெண்ணே கும்மியடி

கும்மியடி பெண்ணே,
கும்மியடி - நன்றாய்,
கூடிக் குலாவியே,
கும்மியடி.

●

ஆடி நீ பாடியே
கும்மியடி - என்றும்,
ஆனந்தம் பொங்கிட
கும்மியடி.

●

சாடியோர் பெண்களைச்
சாய்ந்து விட்டார் - என்று,
பாடியே நீயுமே
கும்மியடி.
நாடியே சென்றிடக்
கல்வியை - என்றுமே
ஓடியே ஆடி நீ
கும்மியடி.

- கும்மியடிபெண்ணே

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழியும் வழியும்

தமிழ் மொழி விழியே - அதில்
மறை மொழி ஒளியே.
நபிமொழி வழியே - நாங்கள்
நடந்திடவிழைவோம்.

●

ஆட்சிவழி உமறும் - நல்
மாட்சி வழி அறிவும்
வீரவழி அலியும் - என்றும்
விரும்பி வழி நடப்போம்.

●

முத்து நிகர் நாடும் - நற்
சொத்து நிகர் ஏடும்,
நல்ல புகழ் பாடும் - கவிப்
பஞ்சமினியோடும்.

●

உலகமொழி எங்கும் - நல்
இலக்கியங்கள் செய்தோம்.
நல்லமொழி தமிழில் - அதை
ஆக்கி மகிழ்ந்திடுவோம்.

●

மருதூர் - ஏ - மஜீத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்கள் போதும் விளையாட
# ஆரியாவாறா சேர்க்காதே.

மாப்பிள்ளை பெண்ணு சோடிச்சி,
மணவறையுள்ளே தான் வச்சி,
கண்டுகளிக்கும் கல்யாணம்,
கட்டிப் பார்ப்போம் வாருங்கடி.

●

தாரை ஒட்டித் தலை வைச்சி,
குண்டுமணியால் கண்வைச்சி,
முருங்கைப் பூவால் வாய் வச்சி
பெண்ணைச் செய்வோம் வாருங்கடி

●

மாப்பிள்ளைக்காரி நானேதான்,
மகிழ்ச்சிதானே உங்களுக்கு.
சீதனம் ஏதும் தரவேண்டாம்,
சிக்கனமான கலியாணம்.

●

கூடி ஒன்றாய்க் குரவையிட்டு,
கொண்டு போவோம் மருதோன்றி.
ஆயிசா எடுகா ஆராத்தி
அனைவரும் போவோம் பெண்பார்க்க.

●

இந்த மரமே என் வீடு
குப்பை மேடு பெண் வீடு
ஆட்கள் போதும் விளையாட
ஆரியா வாறா சேர்க்காதே

●

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுபதுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறுபதுகளில்

- அழகே உனை நான்
  ஆராதிக்கின்றேன்.

- முக்கனியும்
  சர்க்கரையும்.

- உனக்கும் அவளுக்கும்
  என்ன உறவோ?

- அடிமை நான்
  ஆணையிடு.

- குருதியும்
  குளிகையும்.

- உறவும்
  உணர்வும்.

- ஆசி கூறினேன்
  அழகுடன் வாழ்க நீ.

- இணைவும்
  இயல்பும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உறவும்
  பிரிவும்.

- அன்னத்தின் சுவடு
  அழகாய்த் தெரிகிறது.

- பாவத்தை அறியாத
  பாவிகள்.

- மெய்யது பொய்யே
  அழிவது மெய்யே.

- பாடி வரும் தென்றல்
  உனைப் பார்த்ததாகச் சொல்லும்.

- ஆ! ஊ!!
  ஐயோ பாவம்

- கொட்டிவைத்துள்ள
  கோடி நட்சத்திரங்கள்.

- இது நான் எழுதிய கவிதையல்ல;
  அவள் எழுதிய கடிதம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகே உனை நான் ஆராதிக்கின்றேன்.

கந்தரியே,
சொர்க்கத்துப் பூவே,
விழியால் எனை விழுங்கும்
விந்தை மிகக் கற்றவளே,
பன்னீர்த் தடாகத்தில்
சந்தனப் பூவே,
பாவே, பரிமளமே,
ஆ!
அழகே, உனை நான் ஆராதிக்கின்றேன்.

●

அஜந்தாவின் ஓவியங்கள்,
எல்லோராச் சிலைகள்,
சீகிரியச் சுவரின்
சிந்தையள்ளும் சித்திரங்கள்
எல்லாமே உன்னிடத்தில்
இறந்து பெற்ற வடிவுகளே.
நீயோ,
அள்ள அள்ளக் குறையாத
அழகின் ஜீவநதி;
என் ஆத்மாவின் அழகிய தரிசனம்.
அதனால், அழகே
உனை நான் ஆராதிக்கின்றேன்

---

மருதூர் -ஏ-மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன் சொன்ன அந்த
அஜந்தா, எல்லோராக்கள்
நடக்க முடியாத. உணர்ச்சியற்ற
பிணைங்கள், பிண்டங்கள்.
நீயோ,

எனையெண்ணி
அடிமேல் அடி எண்ணி,
வருகின்ற வடிவெண்ணிப், பார்க்கின்றேன்.
அந்த உணர்வில்,
பாப்பாடி மகிழ்கின்றேன்.
அதன் பின், அழகே
உனை நான்
ஆராதிக்கின்றேன்.

●

எச்சிக்கும் பேச்சிக்கும்,
இலக்காகா எழில் உருவில்
மாச்சிக்கும் மரவள்ளிக்
கிழங்கு நிறச் சாயல்.
மதி முகத்தில் ஆயிரம்
பூப்பூக்கும் புன்முறுவல்.
எண்ணில் இனிக்கும்
என் பிரிந்தாவனமே,
ஆ! என் அழகே
உனை நான்
ஆராதிக்கின்றேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கனியும் சர்க்கரையும்.

மோதலே காதலாகி,
முறுவலில் மையலாகி,
அன்னத்தின் பின்னே சென்று,
அலைந்ததை எண்ணுகின்றேன்.

●

பொல்லாத கள்ளனென்று,
புகன்றதும் ஏனோ சொல்லு?
பள்ளியில் உன்னைக்காண,
வெள்ளியே நல்ல நாளா?

●

பாட்டுக் கிளியே நீ,
சோட்டுக் கிளியாகி,
வாழைப்பழம் மென்ற,
வடிவழகை நான் மறவேன்.

●

சொண்டிலே சொண்டுவைத்து,
சொர்க்கத்தின் நினைவுகாட்டி,
கக்கத்தில் கையைவைத்து,
காவியம் பாடிநின்றேன்

●

முக்கனி நீ,
சர்க்கரை நான்,
அக்கறையோடு,
ஆனமட்டும் சுவைத்திருப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உனக்கும் அவளுக்கும் என்ன உறவோ?

இருவருக்கும்
வடிவான
வட்டமுகம்,
நீ முகத்தை
மேகத்துள் மறைத்துக் கொள்வது போல
அவளும் அடிக்கடி
முக்காட்டினால் முகத்தை
மறைத்துக் கொள்கிறாள்!
நிலவே,
உனக்கும் அவளுக்கும்
என்ன உறவோ?

அந்த
வடிவான வட்டமுகம்
சிலவேளை
வாடியிருக்கும்.
கால நிலை
மப்பும் மந்தாரமுமாய்
இருக்கும் போது
நீ
எப்படி இருப்பாயோ
அப்படியே.
நிலவே,
உனக்கும் அவளுக்கும்
என்ன உறவோ?

---

மருதூர் ஏ - மஜீத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைப் போல்த்தான்
அவளுக்கும்
தங்கநிறம்.
நிலவொளியில்
தகதகப்பாள்.
சில வேளை
நான்
அவளைக் காணாது
தவிப்பேன்.
அப்போதெல்லாம்
எனக்கு
உலகமே
இருண்டு விடும்,
நீ இல்லாத இரவுபோல.
நிலவே
உனக்கும் அவளுக்கும்
என்ன உறவோ?
நான்
போகுமிடமெல்லாம்
நீ
வருவது போலவே
அவள் நினைவும்
எனைத் தொடர்கிறது.
வெளியூரில் என்ன,
வெளிநாட்டிலும் இப்படியே.
நிலவே
உனக்கும் அவளுக்கும்
என்ன உறவோ?

---





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிமை நான் ஆணையிடு.

மல்லிகைக் கும்பத்துள்
முகம் புதைத்துக்கிடந்த எனை,
கள்ளி முள் பற்றைக்குள்
தடாவுதலே உன் பிரிவா?

●

சர்க்கரை நிறத்தோடு
சங்கமித்த என்னுயிரை
சற்றும் இரங்காது
சட்டென்று,
பிரித்தனரே.

●

அர்த்தம் தெரியாத
அந்த உறவின்
அடிச் சுவட்டைப்
பின் தொடர்ந்து
அன்பே நான் வந்தேன்.
அடிமை நான்
ஆணையிடு!

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடுதியும்
## குளிகையும்.

கும்மிருட்டு!
குறுகலன் போல் வந்து,
அள்ளி அணைத்து,
அதற்குள் என்ன செய்தார்?

●

மாமி மகன்!
மச்சான் முறையும் தான்
ஆனாலுமதற்குள்
அவசரம் ஏன் கொண்டார்.

●

ஆகாது என்று,
அன்புடனே சொல்லிவைத்தேன்,
நோகாது பேசி
நுணுக்கம் பல புரிந்தார்!

●

''குடுதி, குளிகை''
கூம்பி, குசுகுசுத்தார்.
கூட்டி வாரியே
கோலம்பலநெய்தார்

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பள்ளியிலே,
படித்தபோது ஒன்றாய்,
படுமோசம் மக்கு
பயந்தாங்கொள்ளி அவர்!

●

இந்நோக்கு
எப்போது அவர்கற்றார்.
பட்டணத்தில் இதற்கான
பள்ளி வேறுண்டோ?

●

கற்பிற்கு
விளக்கம்காண விழைந்தாரோ?
கற்பு திண்மையுடன்
கலன் பெருகாது காத்திடல்.

●

''ஆம்'' என்றே
அறிவுரை சொல்லி நின்றார்.
எப்படித்தான் சொன்னாலும்
என் மனம் ஒப்பாதாம்.

●

மனத்தாலே மாசு
மண்ணும் நினையாத
மரியாளும், குந்தியும்,
மனக் கண்ணில் தோன்றுகிறார்.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவும் உணர்வும்.

மலர் ஆடக் காரணத்தை,
மனதுள் நான் நினைக்கின்றேன்.
காற்றே தான் காரணமோ?
காற்றை நான் காணவில்லை.
காணாத பொருளெல்லாம்,
கண்டிப்பாய் இல்லையென்றால்;
காற்று என்று சொல்வதிலே,
கடுகளவும் உண்மையில்லை.
மலராடக் கண்ட வண்டு
மகிழ்ச்சியுடன் வந்து குந்தி,
அளியுண்டு செல்கையிலே
அப்பியதோ மகரந்தம்?
அடுத்துமோர் மலரினிலே
அதுகுந்தச் சங்கமத்தால்
கன்னி, மலர், கருவுற்றுக்
காய்த்துக் கனிந்ததுவோ?
காற்றாகி, வண்டாகி,
கன்னி, மலர், காயாகி,
கனியாகி, மூத்தாய்
முழுச்சுவைதான் மாந்தர்க்குச்,
சேர்த்தாய்! சிறு வித்தாய்ச்
சேர்கின்றாய் மறுபடியும்
பூமியிலே புது உறவு
புதுமையே உன் உறவு.

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசி கூறினேன் அழகுடன் வாழ்க நீ

கருணை வடிவாய்க்,
கனிந்த இறைவன்,
அருளினைப் பெற்று,
அவனியில் வாழ,
இதயத் திருந்தவன்,
என்ற முறையில்,
ஆசி கூறினேன்,
அழகுடன் வாழ்க நீ.
மங்கலச் செந்தமிழ்
வாழ்ந்தது செப்ப,
மங்கையர் குரவை,
மகிழ்வுடன் ஒலிக்க,
மாண்புறு மன்னனைக்,
கூடி நீ வாழ,
கூறினேன் ஆசி,
கோடி நாள் வாழ்க.
அந்தமில்லா தியின்,
அருளினைப் பெற்றிடில்,
அழகுறு மக்களை,
பெற்றிடல் நிச்சயம்.
பெற்ற நற் பிள்ளையை,
பேணி வளர்த்திடில்,
பேரனைப் பெற்றிடும்
பேறுனைப் பிரிந்திடா.

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணைவும்**
**இயல்பும்.**

தச்சன் மரத்தை,
மெச்சக் குடைந்தும்,
சிற்பி சிலையை,
செதுக்கியதாலும்,
கலியைக் குயவன்,
கடைந்ததினாலும்,
கலையாம் உருவம்,
கண்டு கொண்டனர்.
கலைஞர் என்றே
கணிக்கப் பெற்றனர்.

●

மனத்தின் விருப்பம்,
மரத்தில், மண்ணில்,
கல்லில் என்று,
மலர்ச்சி பெற்று,
கலையாய் மிளிர்ந்து
காலத்தை வென்றது.
மானிட இனமே
மகிழ்ச்சி கொண்டது.

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத் தானே,
அவனும் செய்தான்,
அன்பால் அவளை,
அணைத்து இறுக்கி,
பேச்சும் மூச்சும்,
ஒன்றாய் ஆக்கி,
அன்பாம் உளியால்,
உர்ணவைக் கிண்டி,
அந்த உயிரைச்,
செதுக்கி வைத்தான்.

●

உயிரோடுள்ள
அந்தச் சிலையும்
மக்கள் மனதில்
இடமே கொண்டால்,
செதுக்கிய அவனும்,
கலைஞன் தானே.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவும் பிரிவும்

உள்ளத்தில் ஒரு போதும்
    மாறாது உன்னுருவம்.
பள்ளத்தில் வீழ்கின்ற
    பாலாறு நம் இணைவு.
வெள்ளத்தில் நெருப்பில்
    வீழ்ந்தாலும் அழியாது.
கள்ளத்தார் சொல் கேட்டு
    கலைந்திடுமோ நம் உறவு?
தங்கத்தின் நிறத்தை
    உன் அங்கத்தில் பூசியதார்?
சங்கொத்த கழுத்திற்கு
    சங்குமணி தான் பொருத்தம்!
தந்தத்தில் கடைந்தெடுத்து
    தரமான வேலை செய்து
அங்கமாய்ப் உனக்குவைத்த
    அழகுதனை என்னென்பேன்.
கக்கத்தில் புத்தகத்தை
    கச்சிதமாய்த் தூக்கி வைத்து
வெட்கத்தில் விழி சுழற்றி
    வீதியில் நீ போகையிலே,
பக்கத்தால் நான் வருவேன்
    பார்த்து நீ சிரித்தால்
சொர்க்கத்தில் இருத்தல் போல்
    சொர்ப்பனம் கண்டு வந்தேன்.

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்னத்தின் கவடு அழகாகத் தெரிகிறது.**

வெள்ளை மணலை,
விடிந்தெழுந்து பார்க்கின்றேன்,
அன்னத்தின் கவடு,
அழகாய்த் தெரிகிறது.
கன்னம், களிநுதல்,
எல்லாமே கற்பனையா?
வந்து பின் சென்ற,
வழி நீண்டு தெரிகிறதே.
எஞ்சியது எச்சம்,
ஏங்கித் தவிப்பதுமேன்,
அவளும் எச்சமா?
ஆர்வழி தொடர்வதோ?

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாவத்தை அறியாத பாவிகள்.**

ஓட்டுண்ணி என்று,
றோசாக்கள்
உனக்கெதிராய்
பிரச்சாரம் செய்கிறார்கள்.
எனக்கோ நீ ஓக்கிட்!
உனை நான்
கோட்டில் அணிய
அவாவி நின்றேன்!
றோசாவை விட நீ,
கவர்ச்சி புதிது!
அதனால்,
எனக்கு உன் மீது ஏகப்பட்ட ஆசை.
ஆனால்,
உனக்கோ ஊரெல்லாம்
சிலப்பதிகார அரங்கேற்றம்.
பாவத்தை அறியாத அவர்கள் உனை
ஏற்றுமதிப் பொருளாக்கி விட்டனர்.
வெளியூரிலும் உனக்கு
நல்ல கிராக்கி இருக்கத் தான் செய்யும்
காரணம்,
நீ நல்ல கவர்ச்சி
ரோசாவை விடப் புதிது, அழகு.
ஓகிட்டே!
நீ
எங்கிருந்தாலும் வாழ்க!

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்யானது பொய்யே
## அழிவது மெய்யே.

மங்கை நினைவே,
கங்கை நதியா?
நங்கை நினைவில்,
வரட்சி இலையா?

●

எங்கு போயினும்
இந்த நிலையா?
சங்கு வளையல்
சத்தம் ஏனோ.

●

மழையில் நனைந்து
வெய்லில் காய்ந்தும்
மறு முறை நனைய
மனத்தில் இடமா?

●

மெய்யோ துரும்பாய்
மெலிந்தும் போச்சு
அய்யோ வேண்டாம்
அனைத்தும் பொய்யே.

●

கானல் நீரைக்
கண்டமான் கதை
அய்யோ வேண்டாம்.
அனைத்தும் பொய்யே.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடிவரும் தென்றல் உனை பார்த்ததாகக் கூறும்

என் இதய மலரே!
உனை,
என் ஆத்மா எப்பொழுதும்,
தரிசித்துக் கொண்டே இருக்கும்.
ஓடும் மேகங்கள்,
உனைக் கண்டதாக,
என்னிடம் வந்து கூறும்.
பாடி வரும் தென்றல்,
உனைப்
பார்த்ததாக வந்து சொல்லும்.
கிளிகள் வந்து கீச்சிட்டுக்கத்தி,
அவளும் பிள்ளைகளும்,
அமைதியாய் இருப்பதாகச்,
சொல்லி மகிழும்.
இருந்தும் என் மனம் தாங்காது.
மீண்டும்,
என் இனியவள் இளைத்துள்ளாளா?
ஈ யென்று சிரிக்கின்றாளா?
எனக் கேட்பேன்.
தென்றல், தேன் நிலவு, அலை கடல்
அனைத்தும் என்றனுக்கு
உன் நினைவை
இரை மீட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆ! ஊ!!
## ஐயோ; பாவம்.

தனிசையில்
வெட்டிவைத்த
தயிர் ஆட்டம்.
ஆ!

●

கூர்போட்ட
கம்பு கொண்டு
குத்துதற்கோ
நீ வந்தாய், ஊ!

●

சின்னக் கண்
வலையில்
சிக்கிய மீனானேன்
அய்யோ!

●

ஆச்சிக்கு
அலுத்துப் போச்சு
அன்ன நடையல்ல
அலுத்த நடை பாவம்.

---

மருதூர் - ஏ - மஜீத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொட்டி வைத்துள்ள
# கோடி நட்சத்திரங்கள்.

வான் வெளியில்,
இரவில்,
மிளிரும்
கோடி நட்சத்திரங்கள்,
பகலில்,
பளபளக்கும்,
கோடிக் குழந்தைகள்.
இரண்டும்
எழுப்பும்,
கோடி எண்ணங்கள்.
நட்சத்திரப்
பிள்ளைகள்
கவிஞனின்
கவிதைகள்.

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இது நான் எழுதிய கவிதையல்ல அவள் எழுதிய கடிதம்.

அன்புள்ள அத்தான்,
நான் இதனை,
தாங்கள்
நலமாய் வாழ
நாடி எழுதினேன்.
நிற்க -
இது எனது
கடைசிக் கடிதம்.
அதனாலாயினும்
இக்கடிதம்
உங்களிடத்தில்
முக்கியத்துவம் பெறட்டும்.
உங்கள் கைவசமிருக்கும்
அழகான கவிதையோடு
எனது கடிதம்
சம அந்தஸ்தும்
பெற முடியாதென்பது
எனக்கு
என்றோ
புரிந்த விடயமே.
இதனை
இப்படியும் கூறலாம்.
உங்களைப் பொறுத்த வரை

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்
கவிஞன் வீட்டுக்
கட்டுத் தறியாக முடியாது,
வெறும் கட்டு மரமே.
இதனை,
இன்னொரு வகையாகவும்
கூற முடியும்.
நான்
கண்ணகியல்ல,
மாதவியே.
அதிலும் நான்
விஞ்ஞான யுகத்தின் மாதவி.
அதனால், எனக்கு
மணிமேகலை கூட இல்லை.
இருந்திருந்தால்?
எனக்கும் அழகானதொரு
காவியம் கிடைத்திருக்கும்.
இனி, இவற்றை யெல்லாம்
கதைத்து என்ன செய்ய
நினைத்ததே தவறு
இனியது,
தவறிய தவறாகவே இருக்கட்டும்.
கடைசியாக நான்
அத்தாவென்றழைத்து
உங்களிடம்
கெஞ்சிக் கேட்பதெல்லாம்

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றே ஒன்றுதான்
அது
இந்தக் கடைசிக் கடிதத்தை
உங்களின் கவிதையோடு
சேர்த்துக் கொள்ளுங்கள்
அந்தஸ்து, அல்லது தகுதி,
என்று ஏதும்,
தடையாக இருந்தால்
மனத்துள்ளாயினும்
மறைத்து வைத்துக் கொள்ளுங்கள்.
ஏனெனில்,
இக்கடிதம்
காதல், கலியாணம்,
மனைவி, மக்கள்,
சமூகம், அந்தஸ்து
என்ற
எத்தனையோ
கோடுகளைத்தாண்டிய
ஆத்மஉணர்வு
இந்த உணர்வு
எனக்கு
எப்போது ஏற்பட்டது எனின்
உங்களின்
முதற் கவிதையாம்
முத்தக் கவிதையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்த போதே
என்னுள்ளத்தில்
படிந்து விட்டது எனலாம்.
அதனால்,
அந்த உணர்வினைத் தெரிவிக்கும்
இக்கடிதத்தை
உங்களின் கவிதையோடு
அல்லது மனத்தோடு
சேர்த்துக் கொள்ளுங்கள்.
மனத்தின் உணர்வுகளே
கவிதைகளென்றால்,
என் கடிதமும்
கவிதையாகும்.
அதனால் எங்காயினும்
ஓர் இடத்தில்
இக்கடிதத்தினையும்
சேர்த்துக் கொள்ளுங்கள்.
வேறில்லை,
பிரிய
விடை பெறுகிறேன்.
நன்றி.
இப்படிக்கு,
என்றும் உங்களின்
கட்டு மரமாம் - மாதவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுபதுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுபதுகளில்

- எண்ணி மகிழ்வெய்தி
  எழுதினேன் இம்மடலை.

- அண்ணலே எங்கள் நாதா
  ஆருயிர் போன்றதுதே.

- யாகமும்
  யோகமும்.

- கொள்ளைக்காரனும்
  வெள்ளைக்காரனும்.

- கிள்ளியும்
  அள்ளியும்

- நாளைக்கு
  நான் வருவேன்.

- அகம்புறம் நானுறெல்லாம்
  அடிமைகள் உன்னிடத்தில்.

- நாளையப் பொழுது
  நமக்கென விடியும்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உனக்காகவே
நான் சாகிறேன்.

- இனிய சொல்
புகன்றிடுவாய்.

- கார்மேகம்
சூழ்கிறது.

- வட்டியும்
செட்டியும்

- ஆயிசாவும்
அண்ணலாரும்.

- நினைவுகள்
சாகவில்லை.

- எங்களையும்
எண்ணிப்பார்.

- கடலும்
கிழவியும்.

- விழியிரண்டும்
வண்டுகளோ?

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஏக்கங்கள் திருமா
என்றென்னைப் பார்க்கிறாள்.

- உன் நவீனத்தில்
புதுமையில்லை.

- மூத்தும்
சொத்தும்.

- பன்னீர்க் கூதலும்
சந்தனப் போர்வையும்.

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணி மகிழ்வெய்தி எழுதினேன் இம்மடலை.

உன்னை,
உன் உணர்வை,
எண்ணி மகிழ்வெய்தி
எழுதினேன் இம்மடலை.

●

உன்னோடிருக்கையில்,
நான் பிள்ளை தான்.
இப்பொழுதோ,
பென்னம் பெரிய,
பெயரெடுத்த கவிஞன்.
எல்லாம் உந்தன்
இன்பத் தாலாட்டில்,
கிடைத்த உணர்வுகளே.
ஸாஹிறா என்ற,
தாய் தந்த,
அமுதூட்டல்.
அதனால்த்தான் இத்தனை,
ஆனந்தம் என் வாழ்வில்.
அரசனே என்றாலும்,
அவன் தாய்க்கு மகனேதான்.
அதனால்,
உன்னை,
உன்னுணர்வை,
ஒரு பொழுதும் நான் மறவேன்.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னலே எங்கள் நாதா!
# ஆருயிர் போன்ற தூதே.

ஆயிரம் மலர்கள் கொய்து,
அடுக்கியே கட்டில் செய்து
படுத்திடத் தந்த போதும்,
படுக்காது விட்ட கோனே,
பார் புகழ் நபிபிரானே,
முத்து, நவரெத்தினத்தை,
மூட்டையாய்க் கட்டிவந்து,
கொட்டியே தந்த போதும்,
கொள்கையை விட்டிடாத,
அண்ணலே,
எங்கள் நாதா,
ஆருயிர் போன்ற தூதே,
கன்னலே போன்ற உங்கள்,
கருத்தினைக்
கனமே தானும்,
கனவிலும் மறவோம்.
உண்மை,
சத்திய வாக்கிதென்போம்.

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாகமும்
## போகமும்.

மரமேறி கந்தையா,
நல்ல கடவுள்பக்தன்.
கைதவறி விழுந்த பின்பு
நொண்டி, பித்தன்
பிச்சை எடுத்தான்.
சில வேளை,
எதுவும் கிடைக்காது,
ஒரு நாள் பசியோடு
கோயிலுக்குச் சென்றான்.
வெளியே ஏகப்பட்ட கார்கள்;
உள்ளே அதன் உரிமையாளர்கள்.
அத்துடனே அங்கே
துறவி ஒருத்தர்
யாகம் நடத்துகிறார்.
எரியும் நெருப்பில் நெய், அரிசி என
அளவின்றி
அள்ளிப் போடுகிறார்.
அதனால், நெருப்பு
சுவாலை விட்டெரிகிறது.
கந்தையா வயிற்றுள்ளும்
இதே யாகம் நடக்கிறதா?
பசியால் அவன் வயிறு
பற்றி எரிகிறதே.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொள்ளைக்காரனும் வெள்ளைக்காரனும்

காலை தொடுத்து,
மாலை வரையும்,
அலையும் அவனோ,
பிச்சைக்காரன்.
அலைந்து துப்புக்
கிடைத்து விட்டால்,
இரவில் அவனே
கொள்ளைக்காரன்.

●

காலை தொடுத்து,
மாலை வரையும்,
கடையில் இருப்பான்,
பிஸ்னஸ்காரன்.
ஒன்றைப் பத்தாய்
விற்றுப் பணத்தை,
எண்ணும் போது,
கொள்ளைக்காரன்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வேலை,
அந்த வேலை,
என்றில்லாமல்,
இட்ட வேலை,
தொட்ட வேலை,
என்று எதையும்,
செய்து முடிப்பவன்,
வேலைக்காரன்.

●

மாடா மனிதனா?
என்று வினவ,
இடமேயின்றி,
உழைத்த பணத்தை
அள்ளியிறைத்து
அனைவரும் பார்க்க
செலவு செய்பவன்
வெள்ளைக்காரன்.

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிள்ளியும்
# அள்ளியும்.

பூம்பொழில் தன்னில்,
பூங்கொடி யொன்று,
ஆடிய போது
ஆடியோராயிரம்.

●

கொவ்வையிதழும்,
குறுந் சிரிப்பும்,
மையிட்ட கண்ணுமாய்
பூம்பொழில் தன்னில்,
பூங்கொடியொன்று
ஆடிய போது
ஆடியோராயிரம்.

●

ஆடியவர் முடியும் மூன்
அவள் கரம் நீளவே
கிள்ளியே கொடுத்தனர்.
அவளோ,
அனைவர் மனத்தையும்
அள்ளியே சென்றனள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளைக்கு நான் வருவேன்.

வாங்கின் ஓசை, வானில் கலக்க,
கோயில் மணிகள், கூட்டமாய் ஒலித்தன.
கார்ல்மாக்ஸ், எங்கல்ஸ்,
கந்தன், புத்தன்,
அண்ணலாம் முகம்மத்,
அவர் முன் இயேசு,
என்று நினைத்து
அலைந்த மனமோ,
அமைதி கொண்டது.
புண்ணிய மூர்த்திகள்,
போதித்ததெல்லாம், என்ன ஆச்சு
அந்தோ எனக்கு, வயசும் போச்சு.
அங்கே தெரிவது
கிறிஸ்தவர் சேச்சா?
அருள் நிறை கண்ணொடு,
சிலுவையில் இயேசு,
இயேசு! இயேசு!!
என்றே அழைத்தேன்,
நாளை யெந்தன்
வரவைப் பேசு,
இயேசு நானே
என்றே மறைந்தார்.
எல்லாம் ஒளிமயம்,
அதனுள் தெரிந்தது,

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகம் புறம் நானூறெல்லாம் அடிமைகள் உன்னிடத்தில்.

அறைக்கு நான் வந்து நாளை
சந்திக்க விழைந்த போது,
"இருப்பனோ தெரியாதன்பு;
எதற்கும் நீர் வந்து பாரும்!"
என்று நீ சொன்ன போது,
நினைத்தேனா இதனை என்னே,
நீள் துயில் கொள்வதற்கா
நீ இது உரைத்தாய் சொல்லு?

அகம் புறம் நானூறெல்லாம்
அடிமைகள் உன்னிடத்தில்.
கலாநிதி சிங்கியென்றால்
கலங்கிடும் காரிகையும்
காப்பியத் தோணியேறி
கரைபல கண்ட உன்னை
கொடுமைகள் செய்யும் கொள்ளி
கொண்டதே ஐயோ! இன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடியே யெந்தன் இல்லம்
　　திரிந்து நீ வந்து சேர்ந்து,
கூடியே கதைத்திருந்து
　　கூர்மையாம் நூல்கள் தந்து,
நாடியே கல்வி சொன்ன
　　நாயகன் நீயோ இன்று
ஓடியே போனதெங்கே
　　உன்னை நான் காண்பதெப்போ?

●

அங்கிகள் என்ன கோலம்,
　　அழகாக உடுக்கச் சொன்னால்,
''சிங்கிக்கு அறிவே தாகம்,
　　சிங்காரம் அல்ல'' என்பாய்!
தங்கியே இருந்தோம் உன்னில்,
　　தவிக்கிறோம் எங்கே போவோம்.
வங்கியே போச்சுதய்யோ
　　தமிழ் வளருமே அங்கும், உன்னால்.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளையப் பொழுது நமக்கென விடியும்.

கத்தும் கடலலைச்,
சத்தமோ எழுந்து,
காற்றிடை மிதந்து,
கரையெல்லாம் ஒலித்தது!

●

நீல வானின்
நித்திய திலகமாம்
நிலவும் எறித்தது!
நிலவும் எறித்தது!

●

எறித்த நிலவில்,
எண்ணற்ற மணல் மேடு,
சீனிக் கும்பமாய்ச்,
சிரித்து மகிழ்ந்தன.

●

சிரித்து மகிழ்ந்த,
சீனிக் கும்பத்தில்,
படுத்துக் கிடந்தான்
படித்த இளைஞன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலையின் ஓசையும்,
அதனிடைக் காற்றும்,
எறித்த நிலவும்,
இளைஞன் மனத்தை,
என்னவோ செய்தது!
இளைஞன் மனத்தை
என்னவோ செய்தது!
அலுத்துக் கிடந்த,
அந்த இளைஞனோ,
அண்ணார்ந்து பார்த்தான்.
நீலவானில்,
நிலவு சிரித்தது!
படித்த இளைஞன்
கதைக்க நினைத்தான்.
கதைக்க நினைத்துக்,
கண்ணை மூடித்,
திறக்குமுன்னே,
நிலவும் எங்கோ,
சென்று மறைந்தது.
மறைந்த நிலவு
மறுபடி வந்தது.
வந்த நிலவின்,
வடிவை மறைக்க,
மீண்டும் மேகம்
நீண்டு வந்தது.
வந்த மேகம்
வடிந்து விலக,

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரித்தது நிலவு!
சிரித்த நிலவின்
சீரிய ஒளியில்,
நீலவானும்,
நீள் பெருங்கடலும்,
அழகிய உலகும்,
அதனிடை மரங்களும்,
அமைதி கொண்டன.
நிலவும் மேகமும்
நிகழ்த்திய போரின்,
பாடமோ அவனுள்
பளிச்செனப் பட்டது
உண்மை உலகின்,
உருவமும் தெரிந்தது.
பட்டம் சுமந்து
படியேறும் கூட்டம்
குறையவே இல்லை.
சாதிகள் நூறு
சாற்றும் மாந்தர்
சந்தியில் நிற்கிறார்,
சாகவே இல்லை.
ஏழை எளியோர்
ஏங்கித் தவிக்கிறார்.
அவர்களுக்கின்னும்,
விடிவே இல்லை.
சாதிகள் சாற்றும்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாந்தரின் உருவில்
மழை மேகம் நூறு.
என்றே இளைஞன்,
எண்ணிக் குமைகிறான்.
மின்னியது மின்னல்,
அது
இடையோ?
அவள்
ஒடியும் இடையோ?
இடையிடையே
அது காட்டும்
பூச்சாண்டி.
பளிச்சிட்ட ஒளியில்
பார்க்கிறான் இளைஞன்.
பரந்த உலகு
விரிந்து கிடக்கிறது!
நொடிக்கும் பொழுதில்,
இடியின் சப்தம்.
திடுக்கிட் டவனும்
நொடிக்குள் எழுகிறான்.
எதிரிகள் சப்தம்,
என்ற நினைப்பு,
சமூக விரோத,
சக்திகள் அவைகள்.
என்று இளைஞன்,
எண்ணி எழுகிறான்!
சிறு மழைத் தூற்றல்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூறல் மழையின்,
ஈரம் காய
எப்போ விடியும்,
என்றே இளைஞன்,
எண்ணி நடக்கிறான்.
விடியாப் பொழுதா?
இல்லவே இல்லை.
விடியும் பொழுது
நமக்கென விடிய,
வீறு கொண்டெழுவோம்.
என்றே எண்ணி,
விடிவை நோக்கி,
விரைந்து நடக்கிறான்.
நடக்கும் அவனை,
ஆசிர்வதிக்க,
அந்தோ ஆயிரம்,
மலர்கள் பூத்தன.
கூவின கோழிகள்,
கரைந்தன காகங்கள்.
கீச்சிடக் குருவி,
கிளிகளும் கத்தின.
சின்னப் பூச்சியும்
சிரித்தே மகிழ்ந்தன!
புலர்ந்தன பொழுது!
மெல்லெனப்
புலர்ந்தது பொழுது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனக்காகவே
# நான் சாகிறேன்.

பசும் புல் மெத்தை,
பளிங்கு நீரோடை,
மலையடிவாரம்,
மணற் குன்று,
என்றே இளமை, எழுந்து மடிய,
அறுவைத் தொழுவத்துள்,
அசை போட்டு நிற்கின்றேன்.

●

உழுதேன், உரமிட்டேன்,
உதிரத்தால் நீர்பாய்ச்சி,
உழைத்தேன்.
ஒய்வதற்குள், சூடு மிதித்தேன்,
சோறாக்க நெல் தந்தேன்.
அதனை வண்டியிலே,
அடுக்கி இழுத்து,
அக்கரை கொண்டு சேர்த்தேன்.
ஆனாலும் நானின்று,
அறுவைத் தொழுவத்துள்,
அசை போட்டு நிற்கின்றேன்.
நீ நீடு வாழ நினைத்தே,
என் பாலைக் கொடுத்தேன்.
நாளை உனக்கு, நாளுணவு.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சாது எனை, அறுப்பாய்!
அதுவரை நானிங்கு,
அறுவைத் தொழுவத்துள்,
அசை போட்டு நிற்கின்றேன்.
நானின்று
அறுவைத் தொழுவத்துள்
அசை போட்டு நிற்கின்றேன்.
செத்த பின் என்தோல்,
செருப்பாம் உன்றனுக்கு,
கொம்பால்,
கோடிப் பொருள் செய்வாய்.
எலும்போ உன்றனுக்கு எனம்.
இத்தனைக்கும் எருமையென்றே
ஏசி மகிழ்கின்றாய்.
இனிச் சொல்லி என்ன பயன்.
மனிதா நானின்று
அறுவைத் தொழுவத்துள்
அசை போட்டு நிற்கின்றேன்.
மாடாய் உழைத்து, ஓடாய்ப் போனான்,
என்ற மொழியே, என்றன் விருது.
நாளை உனக்காய், நானே சாவேன்,
மனுக்காய் நீயோ,
செய்தது என்ன?
மனிதா சொல்லு,
மௌனம் வேண்டாம்.

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனிய சொல் புகன்றிடுவாய்.

இனிய சொல் புகன்றிடுவாய்
எவரிடத்தும்,
இனிய சொல் புகன்றிடுவாய்.
எப்போதும் நீ
இனிய சொல் புகன்றிடுவாய்.
மனது குளிரவே,
மகிழ்ந்து குலவவே,
இனிய சொல் புகன்றிடுவாய்,
மறை மொழியுடனே
நபி வழி நடந்து
இனிய சொல் புகன்றிடுவாய்.
எவரிடத்தும்,
இனிய சொல் புகன்றிடுவாய்.
''அயலவன் பசித்திருக்க
புசியாதே'' என்ற
அண்ணலார் சொல்தனை
அனுதினம் நினைத்து
அவனியில் வாழ்ந்து
இனிய சொல் புகன்றிடுவாய்.
எவரிடத்தும்
இனிய சொல் புகன்றிடுவாய்.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார்மேகம் சூழ்கிறது.

ஒற்றைப் பனையின் கீழ்,
ஒரு குடிசை. அதனுள்ளே,
கள்ளிறக்கும் தொழிலாளி
கார்த்திகேசுவின் குடும்பம்!

●

காலை மாலை கடுமுழைப்பு,
காலமெல்லாம் இதேயுழைப்பு,
ஆனாலும் கார்த்திகேசு,
அணிவதற்கு ஒரு சட்டையில்லை.

●

உழைப்பும் ஊதியமும்,
ஒழுங்கில்லையென்பதனால்,
அலைகடல் துரும்பது போல்,
அவதிக்குள்ளாகின்றான்.

●

வருகின்ற வருமானம்,
வாழ்வதற்குப் போதாது,
எல்லோர்க்கும் இந்நிலையா?
எழில் உலகைப் பார்க்கின்றான்.

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்துப் பனந்தோட்டம்,
பார்வதியாள் சொந்தம்.
பாரம்பரையாய் வந்து சேர்ந்த,
பல சொத்தில் அதுவுமொன்று.

●

பனை மரமோ அதனுள்ளே,
பல் நூறு. பளபளக்கும்.
கார், பங்களா,
பார்புகழும் சொர்க்கத்து வாழ்வு.

●

பார்வதிக்கு இரண்டு
ஆண் மக்கள்; தொழில் இல்லை;
அவள் கணவன் ஐயாத்துரையும்,
இப்படித்தான் இருந்தான், இறந்தான்.

●

வழிவழியாய் வந்த சொத்தில்,
வாழ்ந்து பழகி விட்டார்.
கார்த்திகேசுக் கூட்டம்
கண்விழித்துக் கொண்டின்று.

●

தோட்டத்தில் தொடர்ந்து மாடாய்,
தொழில் செய்யக் கார்த்திகேசு,
தோட்டத்தை உறிஞ்சி வாழும்,
தேள், உண்ணி, பார்வதியா.

---

மருதூர் - ஏ - மஜீத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையவிதியே பார்வதிக்கு,
நிறை செல்வமளித்ததெனும்,
கறை கொண்ட கருத்தையினி,
முறை மாற்ற நினைக்கின்றான்.

---

பன்னீர்க் கூதனும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டியும் செட்டியும்

வட்டி எடுக்கும்,
செட்டிக் கடையை,
வா நான் காட்டுகிறேன்.
வந்து,
பார் நான் காட்டு வதை.
கடவுள் படங்கள்
கனதியாய் உண்டு!
அணையா விளக்கு,
அவைகளின் அருகே!
பொட்டும் பூவும்,
இட்டும் தொட்டும்,
வாசக்குச்சியை,
வகையாய் எரித்தும்
வைத்துளர் அங்கே!
ஏன் இவை என்று
எண்ணி நீ பாராய்!....

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயிசாவும், அண்ணலாரும்.

வெள்ளை மணற் பரப்பில்,
விரித்த ஒரு கம்பளத்தில்,
அண்ணல் நபியவர்கள்,
அழகாகச் சாய்ந்திருந்தார்.

●

அவர் அருகே ஆயிசா,
அன்னக் கிளிபோலே
அமர்ந்து நிலாமுகத்தின்,
அழகைப் பருகுகின்றார்.

●

பிறை பதினான்குஅன்று,
கறை நிலா மேகத்துள்,
உறைவதும் வருவதுமாய்,
நிறை ஜாலம் காட்டியது.

●

அந்த நிலா... இந்த நிலா......
எந்த நிலா உண்மை நிலா
வானத்து இருந்த நிலா
வந்ததுவோ கீழிறங்கி?

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சற்றே அவர் மனத்தில்,
சலனம் தான் ஆனாலும்,
எந்த நிலா உண்மை நிலா,
என்றறிய ஆவலுற்றார்.

●

அண்ணார்ந்து பார்த்தார்,
அதிலே கருவடுக்கள்!
அருகினிலே பார்த்தார்
பால் நிறத்தில் பல் வரிசை!

●

பல் வரிசை கண்ட அவர்
பலவாறு எண்ணுகின்றார்.
மண்ணிலே கண்ட நிலா
மனத்திருத்திக் களி கூர்ந்தார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவுகள் சாகவில்லை.

அறுபத்தி ஆறு,
அவ்வாண்டை இன்று
இரை மீட்டிப் பார்க்கின்றேன்,
இன்று இரை மீட்டிப் பார்க்கின்றேன்.

●

வாடகை அறையில்
வசித்த காலமது!
ஞாயிற்றுக் கிழமை
நான் எங்கும் போகவில்லை!

●

மூட்டைப் பூச்சியோடு
முழு நேர விளையாட்டு.
''ஐயா!'' எனும் அலறல்.
அது கேட்டு நான் நிமிர்ந்தேன்.

●

பொய்யல்ல ஐந்து
புதல்வர்! தாயோடு ஆறு
கைக்குழந்தை; வாய்கிழியக்
கத்திக் களைத்த நிலை!

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன் அங்கோடையிலே,
கஷ்ட காலமையா,
என்றே அவள் புலம்பி
இருமிக் கையேந்துகிறாள்!

●

உடையாவுமே கிழிசல்.
உள்ளீடு தெரிகிறது.
பசி போக்க ஏதேனும்
பார்த்தளிக்கக் கேட்கின்றாள்.

●

இரக்கம் என் நெஞ்சத்தை
என்னவோ செய்கிறது.
காலை உணவோடு பணம்,
கையில்வைத்தனுப்புகிறேன்.

●

அவ்வேளை அருகினில்,
அறை நண்பன் தான் வந்து,
காலையில் ஏமாந்தாய்,
கடுங்கள்ளி அவளென்றான்.

●

கைக் குழந்தை அவளது தான்!
மற்றவைகள் வாடகைக்குப்
பெற்றவைகள் பேயா.
பேதலித்துப் போனாயே!

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று கொழும்பிலே,
இதுவும் ஒரு வியாபாரம்!
முதலாளி வேறு இருந்து
முடுக்குகின்றான் இவர்களையே!

●

என்றே சிரித்தான்.
இதனை அன்று சிந்தித்தேன்.
இன்று இதனை
இரை மீட்டிப் பார்க்கின்றேன்.

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்களையும்
## எண்ணிப்பார்

படிக்கின்ற மாணவன் நான்
- எனக்கு
படிப்பதற்கு மேசையில்லை,
எட்டுப் புத்தகங்கள்
- அதிலே
ஏழு இன்னும் வாங்கவில்லை.
தாய் மட்டும் என்ன செய்வாள்
- தந்தை
தனிவழியே சென்று விட்டார்,
ஒரு சட்டை எந்தனுக்கு
- அதிலே
ஒரேழு ஓட்டையப்பா.
தாயுடுத்தும் சேலையிலே
- சிறிய
தையலோ ஏராளம்.
தம்பிமார் மூவர்
- மார்க்கச்
சடங்கின்னும் ஆகவில்லை.
ஏழ்மையின் உச்சக் கட்டம்
- எங்களுக்கு
ஏனிந்த நிலைமையென்று
வாகனத்தில் சவாரிசெய்யும்
- கனவானே
எண்ணிப்பாராய்!

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடலும் கிழவியும்.

ஆர்த்து எழுந்த,
அந்தக் கடலலை,
வேர்த்துக் கீழே,
விழுந்து மாய்ந்தது.
பார்த்து இருந்த,
பசுநேர் கிழவியோ,
சேர்த்து நோக்கினாள்,
சென்ற நாளதை.

●

இளமை நினைவு,
எழுந்தது அலைபோல்,
பழமையாகிப்,
படிந்துமடிந்தது.
வழமை நிலைக்கு,
வந்தது மீண்டும்.
நிலைமை நேரே,
இளமையானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலில் சென்ற,
கப்பல்கள் எத்தனை.
உடலின் இளமையை,
அள்ளியோர் அத்தனை.
விடலைப் பருவத்து,
வீரியம் சென்றது,
சுடலைப் பருவத்து,
சோம்பலை நாடியே.

●

பெண்மையென்ற,
பெரிய நாவலை,
மின்னல்ஒளியில்,
படிக்க நினைக்கிறார்,
ஆண்மையுலகு,
எத்தனைஅசடு,
என்றே கிழவி,
எண்ணி எழுகிறாள்.

---

மருதூர் - ஏ - மஜீத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழியிரண்டும் வண்டுகளோ

வாகனத்தை எதிர்பார்த்து,
''பஸ்'' தரிப்பில் நிற்கையிலே
மோகனத்தை ஊட்டுதற்கோ,
மோகினியாள் வந்து நின்றாள்!

●

வெட்டுறுப்புப் பெட்டகத்தின்,
விழி இரண்டும் வண்டுகளோ?
இட்டமுடன் பார்க்கின்றேன்
இருட்டினிலே ஒளிப் பாய்ச்சல்!

●

அற்புதமாய்ப் புள்ளியொன்று,
அவள் கன்னக் கதுப்பினிலே,
பொற் குடத்திற் பொட்டாமோ?
புளகித்தது என்மனசு.

●

குட்டை முடி சுருட்டை,
குருவிக் கூடன்ன கொண்டை,
பட்டணத்துப் பெண்டுகளும்,
பார்த்திவளைச் செய்தனரோ?

●

கொண்டைதனில் ஏன் விரலைக்
குவித்தாள்? அட! இடையேன்
சுண்டியெனை ஈர்த்ததுவோ?
சுந்தரியே நான் ரசிகன்.

---





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமுகொத்த கழுத்தினிலே,
கருஞ் சிவப்புப் பூச்சிமணி,
அமுதூறும் இதழ்களிடை,
அப்பிவைத்த காவிநிறம்!

●

கறுப்பில் அழகியவள்,
கருத்தெல்லாம் இனித்திடினும்,
பெரும் இடத்துப் பெண் என்ற,
பேதலிப்பு என் மனதில்!

●

''கருப்பாயி'' என்ற குரல்,
காதினிலே வந்து விழ,
திருப்புகிறேன் பார்வையினை,
திடுக்குற்றேன்! தெளிவுற்றேன்!

●

''அளிகம்பை''க் குறவனவன்,
அவனுக்கு இவள் மகளா?
வழிவழியாய்ப் பாம்பாட்டும்,
வனமகனின் மகளிவளா ?

●

சிந்தனையில் மின் வெட்டு,
சிரிப்புத்தான் வருகிறது.
அந்தோ! நான் வானத்தை
அண்ணார்ந்து பார்க்கின்றேன்.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனமகளிர் என்றோரா
வஞ்சனையைச் செய்தானா?
இனபேதம் இலை அழகில்
ஏ ! அழகே நான் இரசிகன்.

●

அழகை உலகிடையே,
அள்ளித் தெளித்த அவனோ,
பொதுவுடைமைவாதி.
நானோ இரசிகன்

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏக்கங்கள் திருமா என்றென்னைப் பார்க்கிறாள்.

ஏக்கத்தில் அவள்,
இனிய தாக்கத்தில் நான்,
பண வீக்கத்தில் சிலர்,
ஆக்கத்தை அழிக்கிறார்கள்.

●

நான் அவளைப் பார்க்கின்றேன்,
புத்தன் யசோதரையைப் பார்க்கிறானா?
பாசக்கயிறு அறுகிறதா?
ஏக்கங்கள் திருமா?
என்றென்னைக் கேட்கிறாள்.

●

சுண்டி இழுத்து,
சுறுக்காய் இரு முத்தம்,
அள்ளிக் கொடுத்து,
அவளோடு பேசலுற்றேன்.

●

பல்கலைக்கழகப்,
படிகளிலே நாமிருந்து,
இரவு பகலாய்,
ஏதேதோ பேசி விட்டோம்,
அந்த நினைவு,

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலையாகி மடியட்டும்,
ஏக்கங்கள் தீர,
ஏதும் வழிகாண்போம்,
பட்டத்தைத் தூக்கி,
படிக்கட்டில் போட்டு விட்டு,
எட்டி நடந்து,
என்னுடனே வந்து விடு,
அந்தோ! என்னை,
அழைக்கிறது அவ்வுலகு.

●

அதோ பார்!
தொழிலாளர் உலகு,
துவண்டு மடிகிறது,
உழைப்பிற்கேற்ற,
ஊதியமே இல்லாது,
மடிந்து மாய்கிறது,
பலபேர் உழைப்பை,
ஒருவன் சுரண்டுகிறான்,
உழைப்பாளிபோட
ஒழுங்கான சட்டையில்லை.
வீடின்றி ஏழைகள்,
வீதியிலே தூங்குகிறார்,
காற்றில், வெய்யிலில்,
கடும் மழையில், புயலில்,
போரிட்டு நின்ற,
போராளி தொழிலாளி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழுது உரமிட்டு
உதிரத்தால் நீர்பாய்ச்சி
பயிர் விளைத்த விவசாயி,
பகலெல்லாம் பட்டினியாம்,
வர்க்கப் போராட்டம்,
வாவென்றழைக்கிறது.
ஏக்கத்தால் வாடும்,
ஏழை எளியவர்க்கு,
வாழ்வளிக்கப் புறப்பட்டேன்,
ஏக்கங்கள் தீர
இணைந்து போரிடுவோம்.
சிங்களவன், தமிழன்,
அவனோ சோனி,
என்றெல்லாம் நாங்கள்,
இனவாதம் பேச மாட்டோம்.
ஒன்றேகுலம், ஒருவனே தேவன்,
என்றே உரைத்து,
ஏக்கங்கள் தீர்த்துவைப்போம்.
உணர்ச்சியில் ஏதேதோ
உளறிவிட்டேன் என்றா
ஏறிட்டுப் பார்க்கின்றாய்,
கண்ணே!
கலக்கத்தை விட்டுவிடு.
ஏக்கங்கள் தீர
இணைந்து நாம் போரிடுவோம்.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தும் சொத்தும்.

முத்தென்று சொன்னவுடன்,
பொத்தென்று எம்மனத்தில்.
வித்தொன்று வந்து விழும்,
சொத்தென்று பணக்காரர். !

●

உண்மை வழி எண்ணிநின்றோர்,
ஒரு போதும் ஏற்க மாட்டார்,
முத்ததோ பணக்காரர்,
சொத்தென்ற கருத்ததனை.

●

ஏர் பிடித்தோன், இழகாநின்ற,
பார் உடைத்தோன்,
அழகாம் நன்றே,
ஆடைசெய்தோன், வியர்வையாலே,
ஆனவன்தான் ஆணிமுத்து.

●

தொழில் செய்தே வாழ்ந்த தோழர்,
தோற்றுவித்த வியர்வை,
அழியாத சொத்து என்றும்.
அதனுருவே முத்து.

---

பனனீர்க கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தை எண்ணி மண்ணில்,
காத்திருந்த வியர்வை
வெள்ளத்தால் அள்ளுண்டு,
விறுகடல் போய்ச் சேர்ந்ததுவே.

●

கடலினுள்ளே சிப்பியதை,
கண்டவுடன் ஆதரித்து,
உடலுறவு கொண்டாடி,
ஒரு திட்டம் சொன்னதுவே.

●

உன்னை உன்னுணர்வை,
ஒடுக்கி நின்ற பணமுதலை,
வெல்வதற்கு வழிகேளு
விலைமதியாமுத்தாய் ஆகு.

●

என்ற சொல் இனிதே கேட்டு
கருவுற்று முத்தாய் ஆகி,
கருவறுக்கும் திட்டமுடன்,
கழுத்தினிலே மாலையானோம்.

●

காலத்தை வென்று,
கழுத்தறுத்துக் கதைமுடிக்கும்,
கதையொருநாள் கேட்பீர்,
களிப்புடனே படிப்பீர்தனே.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன் நவீனத்தில் புதுமை இல்லை.

காலிமுகக் கடற்கரையே,
உன் நவீனத்தில் புதுமையில்லை.
காதல், களியாட்டப்,
பாசாங்கு பண்ணுமிடம்,
நீயென்று சொன்னால்,
நிச்சயமாய் அது பொருந்தும்.

●

காளையரின் கன்னியரின்,
கழுத்தினிலே பூச்சுமணி,
சிப்பிக் கோர்வை.
உடையெல்லாம்,
வெட்டும் ஓட்டும்,
பார்க்கப் பரிதாபம்.

●

ஏந்திழையின்,
இடையேன் ஓடிகிறது.
அள்ளி எடுக்க
ஆள்வருமென்றாமோ?
குடைக்குள் நடப்பது
குடும்ப ஒத்திகையா

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைத்தோர் களைப்பால்,
உறங்குகிறார் வீட்டினிலே.
உண்டு பெருத்த,
உடல் சுமந்த பேர்வழிகள்,
ஓடி நேரத்தை,
ஓட்டுகிறார் இங்குவந்து.

●

பேரிரைச்சல் கொண்டு,
அலையாகி மடியும்,
அந்தக் கடலருகே
தாயொருத்தி நீர் தேடி,
சேயுடனே அலையும் காட்சி,
அந்தோ! பரிதாபம்.

●

வயோதிபர் ஒருவர்
சிறுநீர் கழிப்பதற்கு,
இடந் தேடியலைகிறார்,
உன்னிடத்தில் அது இல்லை
காலிமுகக் கடற்கரையே,
உன்னிடத்தில்,
ஒன்றும் புதுமையில்லை.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னீர்க் கூதலும்
# சந்தனப் போர்வையும்.

பென்னம் பெரிய,
கருங்கல் ஒன்று,
உ கும்ப மறுத்துக்,
கிடந்தல் ஒக்கும்,
எந்தன் மனத்தில்,
அந்த நிகழ்வு.

●

எழுபத்தொன்பது,
சித்திரை மாதம்,
திங்கள் இரவு,
திகதி பத்தாம்.

●

அந்த இரவில்,
எங்கள் அன்னை,
அழுதவாறு,
அரட்டிய போது தான்,
தந்தை பிரிந்த,
செய்தி தெரிந்தது.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்றைப் பொழுது,
தந்தை உடலோ,
கொதியாய்க் கொதித்தது.
காய்ச்சல் கடுமை,
என்றே எண்ணி,
சந்தனம் அரைத்து,
உடலில் பூசி,
போர்வை யாக்கினோம்.
பன்னீர் கொஞ்சம்,
பருக்கிப் பார்த்தோம்,
அனைத்தையும் உதறி,
அகன்றதே அவ்வுயிர்.
அந்தச் சந்தனம்,
பன்னீர் வாசம்,
அகலாதுள்ளதே.

●

ஆ!
என்னருமைத் தந்தையே,
எப்படி எங்களை,
விட்டுப் பிரிய,
மனமும் வந்ததோ?

●

நான்,
இளைஞனாகி,
ஆசானாய் ஆனபோது,
எனக்கு நீங்கள்,
ஆசானாகி,

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எரிந்தாலும் கயிறு,
முறுக்கெரியா
திருத்தல் போல,
இருத்தல் ஏற்பு''
எனப் புகட்டி,
வாழ்ந்தும் காட்டிய,
உங்கள் தோழின்,
பாட்டுச் சால்வை,
பகரும் சாட்சியம்.

●

எங்கள் தந்தை,
எங்களைக் காக்க,
எத்தனை இரவுகள்,
கண்விழித்திருந்தார்
ஓர் இரவாயினும்,
அப்படியிருக்க,
எங்களால் முடிந்ததா?

●

தந்தையே!
நான்,
சிறுவனாய் இருந்த போது,
எனை நீங்கள்,
நண்பர்கள் வீட்டிற்கு,
அழைத்துச் சென்று,

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகம் தந்து,
வாசிக்கச் சொல்லி,
இப்படி உன் மகன்,
வாசிப்பானோ?
எப்படி என் மகன்?
என்றே கேட்டு,
பெருமைப்பட்ட,
அந்த நாளை,
எண்ணியழுகிறேன்.

●

இந்த றோட்டு,
உங்கள் வாப்பா,
சேவையின் சின்னம்,
அதன்பின் யாரும்,
அப்படிச் செய்ய,
எண்ணிய தில்லை.

●

இந்த மதகு,
உங்கள் வாப்பா,
காலக் கட்டு,
வெள்ள காலம்,
மட்டும் நினைப்பர்,
என்று ஊரார்
உரைக்கும்போது

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம் குளிரும்,
தந்தை பெயரால்,
பெருமை கொண்ட,
தனயர் நாங்கள்.

●

அன்று,
உங்கள் ஜனாசா,
ஊர்வலமாகச் சென்ற போது,
கலந்து கொண்டோர்,
கட்டியம் கூறினர்.
நீங்கள்,
சமூக சேவைப்,
பிரியர் என்றே.

●

எங்கள் கண்ணீர் வெள்ளமும்,
மக்கள் வெள்ளமும், கலந்த,
வெள்ளக் காட்டில்
உங்கள் ஜனாசா,
வெள்ளை றோசாவாய்,
மெல்ல மெல்ல,
மிதந்து சென்றதே,
ஆ!
என்னருமைத் தந்தையே,
எப்படி எங்களை,
விட்டுப் பிரிய,
மனமும் வந்ததோ?

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்பதுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வழிமேல்
விழிவைத்தோம்.

- உனக்கு
என் இனியவாழ்த்துக்கள்.

- மூலதனத்தின்
முடிச்சு அவிழ்ந்தது.

- உத்தரவாதம்தேடி
எழுதப்பட்ட உயில்.

- இயேசுவே!
ஏன் சிலையானாய்.

- வித்துக்கள்
விருட்சமாகும்.

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் தலைவர் மன்சூர் வாழ்க

மனதுடன் மனைவி,
நல்ல,
குருவுடன் மனையும்,
வாய்த்தல்,
முன்வினைப் பயனே,
என்ற,
முன்னோர்கள் வாக்கை,
ஒத்து
நல்லதோர் தலைமை
வாய்த்த
மக்களே நாங்களென்போம்.
அன்புள்ளம் கொண்ட எங்கள்,
மன்சூரின் புகழைப்பாட,
ஆயிரம் ஆண்டு வேண்டும்.
அதனாலே நாங்களெல்லாம்,
பின்னொரு தினத்தில் கூடி,
தலைவரின் புகழைப்பாடி.
நன்றிகள் சொல்வோம் கோடி.
நானிலம் போற்றவாழி!

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அணையா விளக்காய் அவனியில் வாழ்ந்திடு

இவ்விரைந்தில்,
எந்தனை கோடி,
நன்மைகள் செய்தாய்.
எதனை முன்னே,
எடுத்துச் சொல்ல?
கல்வி முன்னா?
கலைகள் முன்னா?
ஆடல் ஓடல்,
அதனிலும் முன்னா,
எடுத்து இயம்ப
எத்தனையுண்டு.
எதனை முன்னே
எடுத்து வாழ்த்த,
பார்புகழ் பாத்திமா
என்றே வாழ்த்தினேன்.
பாத்திமா என்ற,
நாமத்துள்ளும்
நமதின ஒற்றுமை,
நன்கு தெரியுது.
கல்முனை நகரின்
கண்மணி நீயே.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மினவளர்ச்சி
உன்னுள்ளடக்கம்.
வாழி நீ வாழி!
வளம் பெறவாழி!!
கடல் நீர் போல!
கனநாள் வாழி!!
வாழி நீ வாழி!
வளம் பெற வாழி. !

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சம்மாந்துறையூரின் சாந்திநிகேதன்

அரைஞாண் கயிறாக,
அழகாறு ஓடிவர,
நிரை நிரையாய் நெற்கதிர்கள்,
தலைகுனிந்து வாழ்த்திசைக்க,
அருமையாம் நூல் நிலையம்,
அருகிருந்து முறுவலிக்க,
வலப்பக்கம் காளிகோயில்,
இடப்பக்கம் ஊர்ப்பள்ளி,
என்றே இணைந்து,
இன்புற்றுத் தானிருக்க,
வண்ணத்தில் ஆலமரம்,
வடிவாகிக் குடையேந்தி,
வருவோரை வரவேற்க,
வாசலிலே வந்து நிற்கும்,
சம்மாந்துறையூரின்,
சாந்திநிகேதன்
கல்விக் கூடமே!
உனை வாழ்த்த
எந்தனுக்கு, ஒரு
கோடிச் சொற்போதா.
நான் உன் இனியன்,
ஏர் போற்றும் மக்கள்,

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏராளம் உந்தனுக்கு.
பாருக்கும் உந்தனுக்கு,
''பாறூக்'' நற்றலைவன்.
ஏருக்கும் மக்களினை
நீருக்க வாழ்த்துகிறேன்.
நீர் ஊற்றுக்கண் போல
நீர் கல்விதனைக் கொடுக்க
வாழ்த்தி மகிழ்கின்றேன்.
வாயார நான்
வாழ்த்தி மகிழ்கின்றேன்.

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டமும் பாராட்டும்.

''அண்ணே!'' என்று,
அன்போடழைப்பேன்.
''மருதூர்'' வாரும்.
வந்திங்கமரும்,
என்றே என்னை,
இருக்கச் சொல்லி,
ஊரின் புதினம்,
கேட்டே மகிழ்ந்து,
ஏதும் எழுதி,
வந்த நீரோ?
என்றொரு போடு,
போட்டு விட்டு,
வந்துள ''புரூபை'',
வெட்டிக் கீறி
கோடும் இட்டுக்,
குறிப்பும் எழுதி,
எவ்வளவு சொல்லியும்,
பழைய குருடி,
சொல்வதொன்று
செய்வதொன்று''
என்று வாயுள்,
ஏதோ சொல்லி,

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு சொல்லுமன்,
ஊருக்கெப்போ
பயணம் என்றே,
என்னைப் பார்த்து,
கேட்குமுன்னே,
தொலை பேசி,
தொண தொணக்க,
எடுத்துக்காதில்,
வைத்துக் கொண்டு,

●

''ஹலோ! சுப்பர்?
என்ன காணும்
ரூடே. ஏஸ்
வீவில்டுயிட்''
பேசிக் கொண்டே,
தன்னைப் போல,
பெரிய எழுத்தில்,
தமிழைத் தாளில்,
எழுதித் தள்ளி,
தள்ளி வைத்து.
தலையை நிமிர்த்த
''மோணிங்'' என்று
ஒருத்தர் வந்தார்,
அன்போடவரைப்,
பார்த்துச் சிரித்து,

அமரச் சொல்லி,
சைகை காட்டி,
முடிப்பதற்குள்,
அடுத்த புறாப்,
அங்கு வந்தது.
இருந்தால் முடியா,
என்றே எண்ணி,
எழுந்து நின்று,
நாளை வருகிறேன்.
என்று சொல்ல
போனைக் கீழே,
வைத்தவாறே,
என்ன அவசரம்,
இருமன் என்றே,
என்னை இழுத்து,
இருக்கச் செய்து,
வந்தவரோடு,
குசலம், குதூகலம்.

●

''நல்ல மனிதர்'',
என்னுள் நானே,
எண்ணி மகிழ்கிறேன்.
சின்னப்பிள்ளை,
போல மனது,
என்னுள் நானே
எண்ணி மகிழ்கிறேன்.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்குவமான,
பண்பு மனிதர்,
அடக்கமான,
அன்பு மனிதர்,
எனக்குள் நானே,
எண்ணி மகிழ்கிறேன்.

●

பட்டம் சூட்டி,
பாட்டால் வாழ்த்த,
பொன்னால் ஆடை,
போர்த்தி மகிழ,

●

உண்மையான,
உயர்ந்த மனிதர்,
என்னுள் நானே
எண்ணி மகிழ்கிறேன்.

●

சிவனே குருவாம்,
எமக்கொரு நாதனாய்,
இணைந்த ஒருத்தர்.
என்றே என்னுள்,
எண்ணி மகிழ்கிறேன்.

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குயிலே
## ஏன் கூவுகிறாய்

குயிலே ! வரிக்குயிலே,
ஏன் கூவி அழைக்கின்றாய்,
அவள் போய் அநேக நாள்,
என்பதனை நீ அறியாயா?
அறிந்தும் ஏன் அழைத்து,
அல்லலுக்குள்ளாக்குகிறாய்.
குயிலே, வரிக்குயிலே,
ஏன் கூவி அழைக்கின்றாய்.

●

சென்ற சித்திரையில்,
சிரித்து இருந்த அவள்,
இந்தச் சித்திரைக்குள்,
என் தான் போனாளோ?
என்றென்னைக் கேட்டா நீ,
ஏங்கிக் கூவல் செய்கின்றாய்.
குயிலே வரிக்குயிலே,
ஏன் கூவி அழைக்கின்றாய்.

●

சென்ற சித்திரையில்,
சிலிர்க்கும் கூதலிடை,
ஒற்றைப் போர்வைக்குள்
ஒன்றாகி என்னோடு,

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வற்றுக் கிடந்த அவள்,
போர்வைதனைப் பிரித்து,
மெல்லிதழ் விரித்து,
மச்சான் என்றழைத்து,
"அதிகாலை குயில் கூவுது,
எழுந்து படியுங்கோ"
என்றென்னை உசுப்பியது,
இனிய நினைவாகி,
ஏக்கத்தையூட்டு தந்தோ,
மச்சா...... . ன்........ மச் ....... சான்
குயிலே ! வரிக்குயிலே
ஏன் கூவி அழைக்கின்றாய்.

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.

## வாவென்றழைப்பேன்
## என்னைப்பார் சிரிப்பேன்

உன்னைப்பற்றி,
ஓராயிரம் கதைகள்.
அதனால்,
உன்னை நான்,
ஒரு முறை காண்பதற்கு,
எத்தனை தடவை ஏங்கியுள்ளேன்.

●

மாலையில், மலையில்
மூடுபனி மூட்டத்தில்,
உன் ''கார்'' பஸ்ஸாகி,
மாணவரை ஏற்றி,
குலுங்கிக் குலுங்கி,
வருகின்ற வடிவு கூறும்
மாணவரோ ஒரு கோடி.

●

சங்குக் கழுத்தில்,
சந்திரன் முகம்வைத்த,
குன்றுமணிக்கண்ணன்,
கூர்புத்தி வித்தியென்று,
கூறிக்களித்திடும்,
மாணவியர் மறுகோடி.

---

மருதார் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைப்பற்றி,
ஓராயிரம் கதைகள். அதனால்,
உன்னை நான்,
ஒரு முறை காண்பதற்கு,
எத்தனை தடவை ஏங்கியுள்ளேன்.
அன்று கண்டியிலே,
"புணர்ச்சி" விதி கூறி,

●

புது மோடிக் கூத்தாகி,
நின்றாய் உன்னை,
நான் நினைத்தேன்,
காண்பதற்கு முடியவில்லை.

●

புதுக்கவிதை (இல் - இன்),
பொருளான காலத்தில்,
வருகின்றாய், வா !
உன்னை,
வாவென்றழைப்பேன்,
வண்ணத்தில் பாய் விரிப்பேன்,
வாப்பா அறிந்தாலும்,
வழி இருக்கு தப்புதற்கு,
தமிழின் (புணர்ச்சி) விதி,
சதியான ஆண்டு,
அறுபதின் பின் (பா) புணர்ச்சியா?
அரும் (பா) வா.
என் வாழ்த்துக்கள்.

---

பன்னீர்க் கூகலும் சந்தனப் போர்வையும். - ௨ -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழிமேல் விழிவைத்தோம்

பண்ணை, வளர,
வழி நடக்க,
விண்ணை, மண்ணை,
வெற்றி கொண்டுதானெடுக்க,
கண்ணை, கருத்தை,
கருமத்திலேதொடுக்க,
வண்ண வழிசமைத்தோன்,
பார்புகழ் பேடன் பவல்.

●

சாரணர் என்ற,
சங்கையது தான் வளர,
காரணர் ஆன,
கர்த்தாவாம் அவர் புகழை,
நாரணர் யாமோ,
நலன் பெறவே
மாரணர் யாகும் சென்று நிதம்
வளர்த்தே பாடிடுவோம்.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உனக்கு
## என் இனிய வாழ்த்துக்கள்.

அறிவு நிலைத்து,
அகிலம் தழைக்க,
நினைத்து வாழும்,
நினைவு வாழி.

●

உங்கள் பள்ளி,
உயர்நிரு வெஸ்லி,
அன்று போல,
இன்றும் வாழி.

●

பல்கலை பயில
பாக்கியம் பெற்ற
உங்கள் வாழ்வு
உயர வாழி.

●

அறிவு வளர
ஆவன செய்த
உங்கள் ஆசான்
அனைவரும் வாழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூல (தன) த்தின் முடிச்சு அவிழ்ந்தது

நேற்று நான்,
கொழும்பு நகரின்,
பாதையோரம்,
பார்த்து நடந்தேன்,
நேற்று நான்,
கொழும்பு நகரின்,
பாதையோரம்,
பார்த்து நடந்தேன்.

●

வட்டநிலவு,
வண்ணமலர்,
பட்டாம்பூச்சி,
பாடும் மீன்,
அப்பிள் திராட்சை,
என்று,
மனத்துள் ஆட,
ஆடிய மனத்துடன்,
நேற்று நான்,
கொழும்பு நகரின்,
பாதையோரம்,
பார்த்து நடந்தேன்.

---

மருதூர் - ஏ - மஜீத்.

நரைத்த கிழவி,
நாலும் இல்லா,
நரைத்த கிழவி,
நம்பமாட்டீர்,
அவளுக்கேது,
பச்சைக் குழந்தை?
பாலை ஊட்டும்,
பாசாங்குடனே
கையை நீட்டிப்
பிச்சை கேட்டாள்.
பாதையோர,
வியாபார
மூல (தன) த்தின்
முடிச்சு அவிழ்ந்தது.
நேற்று நான்,
கொழும்பு நகரின்,
பாதையோரம்,
பார்த்து நடந்தேன்.
மூல (தன) த்தின்,
முடிச்சு அவிழ்ந்தது.

●

கல்வி என்ற,
கருந்தனத்தின்,
மிச்சசொச்சம்,
பட்டம் என்று,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லைக்காட்டுது
கரிதனமாய்,
இருந்த காலம்,
மாறி இன்று,
எண்ணெய் தனமாய்,
எங்கும் பாயுது.
எண்ணெய் என்ற,
மூல (தன) த்தில்,
எண்ணம் விரியுது.
அங்கு போக
ஆசையும் அரும்புது.
நேற்று நான்,
கொழும்பு நகரின்,
பாதையோரம்,
பார்த்து நடந்தேன்.

●

இரண்டு மூன்று,
இரண்டின் சேர்க்கை,
மூல (தன) த்தின்,
முடிச்சாய் இருந்தது.
இரண்டு தனத்தோடு,
மூன்றும் சேர்ந்து,
மூன்றாம் உலகின்,
முடிச்சாய் இருந்தது.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு நகரின்,
பாதையோரம்,
பார்த்து நடந்தேன்.
மூல (தன) த்தின்.
முடிச்சு அவிழ்ந்தது.
அந்த நூலின்,
அழகிய தலைப்பு,
மூலதனமே.
மூன்று உலகும்,
மூச்சுப் பிடித்து,
படித்த பின்பு,
பரிதாபத்துடனே,
பார்த நூலும்,
மூலதனமே.
கார்ல்மார்க்ஸ்,
ஏங்கல்ஸ்,
கருத்தனத்தின் கூட்டு, மூலதனமே.
நேற்று நான்,
கொழும்பு நகரின்,
பாதையோரம்,
பார்த்து நடந்தேன்.
மூல (தனத்தின்)
முடிச்சு அவிழ்ந்தது.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் மூலை,
முடுக்கெங்கும்,
தனம், தனம்,
தனமே,
தனம், தனம்,
தந்தனம் தனம்,
தனமே, தனம்,
என்ற பாட்டே,
எங்கும் கேட்குது.
நேற்று நான்,
கொழும்பு நகரின்,
பாதையோரம்,
பார்த்து நடந்தேன்
மூல (தன) த்தின்,
முடிச்சு அவிழ்ந்தது.
நேற்று நான்,
கொழும்பு நகரின்,
பாதையோரம்,
பார்த்து நடந்தேன்.
மூல (தன) த்தின்
முடிச்சு அவிழ்ந்தது

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உத்தரவாதம் தேடி எழுதப்பட்ட உயில்.

இது,
வெறும் காகிதத்தில் எழுதப்பட்ட,
கடிதம் அல்ல.
நாங்கள் வடித்த,
இரத்தக் கண்ணீரைச் சேர்த்து,
உயிர்களால் எழுதிய, உயில்.
ஜன்னல் சீலைகளை, சற்றே ஒதுக்கி,
தரிசனம் தந்த,
எங்கள் நிலவுகளின்,
கறைபடிந்த, கதை கேட்டு,
நாங்கள் வடித்த,
இரத்தக் கண்ணீரைச் சேர்த்து,
உயிர்களால் எழுதிய, உயில்.
அண்மையில் நடந்த,
வன் செயலின்போது,
விளைநிலத்தை, வெட்டிக்கீறி,
உள்ளே இருந்த,
பிள்ளைச் செல்வத்தை,
வெளியே இழுத்து, எறிந்த காட்சி,
கண்டு நாங்கள்,
வடித்த இரத்தக், கண்ணீரைச்சேர்த்து
உயிர்களால் எழுதிய, உயில்.

## இயேசுவே!
## ஏன் சிலையானாய்?

கல்லான இதயத்தைக்,
கனியாக்க வந்தாயே,
பொல்லாத மனிதர்க்குப்,
பொறுக்கலையோ உன் செய்கை.
வர்க்க பேதத்தை,
வரட்டுக் கௌரவத்தை,
தர்க்கித்ததாலுன்னைத்,
தரைமட்டமாக்கினரோ?

●

''ஊசியின் காதுள்ளே,
ஒட்டகம் தான் புகுந்தாலும்,
ஆசைக்கும் சொர்க்கத்தை
அடையார் பணக்காரர்.''
என்ற உன் வார்த்தை,
இதயத்தை தாக்கிடவே,
அன்றம் மனிதரெல்லாம்,
அறைந்தனரே உனக்காணி.

●

ஆணி அறைந்துன்,
அங்கத்தை நோகவைத்து,
பாழ் நீராய் இரத்தத்தைப்,
படிந்தோட விட்டனரே,
பின்னுமேன் சிலை செய்து,

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதாக வைத்துள்ளார்?.
இன்னும் சிலையாய் நீ,
இருப்பதும் சரியாமோ?

●

கல்லாக நீ நின்று,
காண்பதுவோ ஒன்றுமில்லை,
நல்லாரை வாழ்விக்க,
நானிலத்தில் நீ வேண்டும்.
இல்லாதார் உன்னை,
இனிதேவரவேற்பர்!
பொல்லாப் பணவெறியைப்,
போக்கிடவே வந்து விடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்துக்கள்
## விருட்சமாகும்.

முத்தெடுக்கும் கடல்,
வற்றி விடுவதில்லை.
தாகம் தீர்க்கும் கிணறு,
தரை தட்டுவதும் குறைவுதான்.
அஃதே போல,
வித்துக்கள்,
விருட்சமாவதும் இயற்கையே.
இதற்கு,
நல்லதோர் எடுத்துக்காட்டு,
மருதமுனை அல் - மனார் என்பேன்.
1912ம் ஆண்டு,
ஆலமர வித்துப்போல்
ஆகிய இப்பாடசாலை,
ஆழ்கடலாய்,
அன்புக் கிணற்றடியாய்,
ஆகி அதனோடு,
பாடல் பெற்ற,
தலமாகவும் ஆகிவிட்டது.
இங்கே,
ஊரும் காலும்,
ஒடுங்கிய நேரத்திலும்,
மாணவர்கள்,
நூலும் கையுமாய் இருந்து,

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுண்மா நுழைபுலன் தேடுவர்.
தேடிய பின்,
ஆடையும் அறிவும்,
அள்ளிக் கொடுத்திடும்,
அற்புத மனிதராகி,
அகம் மகிழ்வர்,
இதற்குக்காலாகி,
பதினோராவது அதிபராகி,
பத்து வருட காலமாக,
அல்லும் பகலும்,
அயராது உழைத்துவரும்,
அதிபரும், அவரது,
ஆசிரிய குழாமும்,
பட்டம் சூட்டிப்,
பாராட்டப்பட வேண்டியவர்களே.
அல் - மனார்.
கடற்கரை அருகேயுள்ள
கலங்கரை விளக்கம் போன்று,
வயலுக்கு நீர்பாய்ச்சும்
வற்றாத நீர் ஓடைபோன்றது.
அதனால் அதனை,
ஒரு மாடி உறவாடி,
பலமாடி நினைவாடி,
களமாடிக் கவிபாடி,
இறை நாடி இன்பம்பெற,
என்றென்றும் வாழ்த்துகின்றேன்.

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்ணூறுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொன்னூறுகளில்.

- கல்லெறிபட்ட
  நீர் நிலவு.

- அந்தோனி
  அதிபரைப்போல் ஆகுக.

- பாரதி எங்களுக்குப்
  பதில் சொல்ல வேண்டும்.

- அல்லாஹ் எழுதிய
  அந்தக் கவிதை.

- ஓர் அழகிய
  ஆத்ம தரிசனம்.

- அன்னை திரேசா
  நீ அணையாவிளக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● உமறுக்கு
ஒரு விழா.

● பூவையும்
பாவையும்.

● பாப்பாடும் புலவன்
பாப்போல நீ வாழி!

● எங்களை விட்டு
எங்கும் போகக் கூடாது.

● வற்றாத புலமை
வளமுடையோன்.

● ஈழவானத்தின்
இலக்கியச் சூரியன்.

● கவிதைக்குள் அடங்காத
கட்டழகு உந்தனுக்கு

---

மருதூர் - ஏ - மஜீத்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கல்விக் கோட்டத்தின்
  கண்ணீர் அஞ்சலி.

- அரிது அரிது மந்திரி மன்சூர்
  மாண்பினைப் பெறுதல்.

- மயோன்
  ஆற்றுப்படை.

- என் இனிய
  மின் மினியே.

- புகழ் மாலை
  உந்தனுக்கே

---

பன்னீர்க் கூதலுப் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லெறிபட்ட
## நீர் நிலவு.

அவள்,
தெளிந்த நீரில்,
பூரணச் சந்திரன்.
அப்படிப்பட்ட,
தோற்றமும் வடிவும்,
குளிர்ச்சியும் மகிழ்ச்சியும்.

●

அவள்,
எனக்குக்,
காய்ச்சல் என்றதும்,
கல்லெறிபட்ட,
நீர்நிலவானாள்.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தோனி அதிபரைப் போல் ஆகுக.

''ஆகுக'' என்ற,
வார்த்தை கொண்டு,
வாழ்த்தினேன் உங்களை.
''ஆகுக'' என்ற,
அந்த வார்த்தை,
ஆயிரம் அர்த்தம்,
கொண்டது காண்பீர்,
அவற்றில் ஒன்று,
அந்தோ! நீ,
அதிபரைப் போல்,
ஆகுக என்பதாம்.

●

அந்தோனி அதிபரைப் போல்,
ஆகுக என்பதாம்.
பாரே புகழும்,
பாத்திமா கண்ட,
உங்கள் அதிபர்,
சங்கைக்குரிய,
சோதரர் மத்யூ,
அதிபரைப் போல்,
ஆகுதல் என்பதாம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பால், அடக்கத்தால்,
எமை அடக்கியாளும்,
அறிவுத் திறத்தால்,
பண்பால், நன்கு,
படிப்பிக்கும் ஆற்றலால்,
தேனீ போல,
தினமும் உழைத்தலால்,
சமூக ஒற்றுமை,
பேணும் திறத்தால்,
அந்தோனி எனும்,
அதிபரைப் போல ஆகுக,
அனைத்திற்கும்,
அந்தோ! நீ,
அதிபராய் ஆகுக.
என வாழ்த்தி,
வகை செய்தேன்.
நன்றி.

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி எங்களுக்கு பதில் சொல்ல வேண்டும்.

பாரதியே!
பாட்டாலே வையத்தைப்பாலித்த,
பாட்டிற்கொரு புலவன்,
பாரதியே!
சற்று நில்லு.
நான் கேட்பதற்கு,
பதில் சொல்லு.
என்றதும்,
சினங்கொண்டு சீறியெழுந்து,
எனைப்பார்த்து,
''யார் நீ,
நில்லென்பதற்கும், சொல்லென்பதற்கும்''
எனக் கேட்டால்,
நான் வேதனைப்படுவேன்.
நான் வேறுயாருமல்ல,
உன்னினத்துப் புலவன்.
பாட்டேதான் வாழ்வு என,
பாப்பாடும் புலவன்.
அதனாலே தான்.
உரிமையோடு கேட்டேன்.
அத்தோடு,
கேள்வியும் நியாயமானதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என நினைத்தே,
நில்லென்றேன், சொல்லென்றேன்.
உன்,
விடை கேட்க விழைகின்றேன்.
நீ
எட்டயபுரத்து,
முத்துப்புலவன் தான்.
உண்மை மறுக்கவில்லை.
அதே எட்டயபுரத்து,
மூத்தபுலவன் உமறை,
உன்னால் மறக்கமுடியுமா?
அல்லது மறைக்க முடியுமா?
கவியேறு அவனன்றோ?
அவனை மறத்தல்,
எப்படி நியாயமாகும்.
அவன்தான் எங்களுக்குப்,
பெரும் புலவன்.
அதனால் நாங்கள்,
அவனை மறக்க மாட்டோம்.
மறப்போரை நாங்கள்,
மன்னிக்கவும் மாட்டோம்
யாமறிந்த புலவரிலே,
கம்பனைப்போல், வள்ளுவன்போல்,
இளங்கோவைப் போல்,
பூமிதனில் யாங்கணுமே,
பிறந்ததில்லை.
என நீ,

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமறை மறந்து பாடல்,
தகுமோ, தர்மமாமோ?
எங்களூர்,
கரிச்சுடர்களின்
சூரியமனமா உந்தனுக்கு?
பெரிய மனிதன் நீ,
மறந்தாயா, மறைத்தாயா?
அறிய ஆவாவுகிறேன்.
உன் மீது எனது நண்பன்,
புரட்சிக் கமால்,
திக்கை வணங்கும் துலுக்கர்,
என நீ பாடியதற்கு,
கண்டனம் தெரிவித்த போது,
கடுமையென நினைத்தேன்.
இப்பொழுது
காணாது என நினைக்கின்றேன்.
பாரதியே,
சற்று நில்லு,
உன்,
விடையென்ன சொல்லு.
இன்றில்லா விட்டாலும்,
என்றோ ஒரு நாள்,
நீ,
விடை சொல்லித்தான் ஆகவேண்டும்
நன்றி.

---

பன்னீர்க் கூதலும் சந்தனப்போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லாஹ் எழுதிய அந்தக் கவிதை

ஆ!
அருமை அற்புதம்,
எத்தனை அழகு
அல்லாஹ் எழுதிய
அந்தக் கவிதை
புதுமை மலிந்த
புதுக் கவிதை
ஆ!
அருமை அற்புதம்
எத்தனை அழகு.

●

மீன் சினை விதையுள்
ஆல விருட்சம்
ஆமினா அடியில்
ஞால விருட்சம்.
ஆ!
அருமை, அற்புதம்
எத்தனை அழகு.
அல்லாஹ் எழுதிய
அந்தக் கவிதை
புதுமை மலிந்த
புதுக் கவிதை.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ!
அருமை அற்புதம்
எத்தனை அழகு

●

அகமது தெளிந்து (அகம் - அது)
முகம்மது வழியாய் (முகம் - அது)
ஜெகமது ஒளிர (ஜெகம் - அது)
அல்லாஹ் எழுதிய
அந்தக் கவிதை
புதுமை மலிந்த
புதுக் கவிதை.
ஆ!
அருமை அற்புதம்
எத்தனை அழகு.

●

இன்று,
நாங்கள்,
புதுக்கவி கண்டு,
புலம்புதல் போல,
அன்று,
மக்கா மக்கள்
புலம்பினர்,
மரபு ஒழிந்தது.
மாண்பு அழிந்தது,
எங்கள் ஓர்மை
எங்கோ போனது.

ஆயிரம் கடவுளும்,
அந்தோ! அழிந்தனர்,
என்றே அவர்கள்
இரைந்து எழுந்தனர்.
ஆயுதம் தாங்கினர்
அழிப்பதற்கென்றே,
புதுக் கவிதை
அழிந்ததா?
இல்லை.
அல்லாஹ் எழுதிய
அந்தக் கவிதை
புதுமை மலிந்த
புதுக் கவிதை.
ஆ!
அருமை அற்புதம்
எத்தனை அழகு.

●

ஒன்று, பத்து,
நூறு, ஆயிரம்
இலட்சம் என்று
எத்தனை நபிமார்
இன் கவியாக
இறைவன் எழுதினான்.
அத்தனை கவிக்கும்
முத்தாப்பு முகம்மது.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ்ற எழுதிய
அந்தக் கவிதை,
புதுமை மலிந்த,
புதுக்கவிதை.
ஆ!
அருமை அற்புதம்
எத்தனை அழகு.

●

மருந்தும், விருந்தும்
மாண்பினில் ஒன்றே,
இருந்தும் என்ன?
ஒதுக்குவர் மருந்தை,
தேவையுள்ளோர்,
மருந்தை எடுத்து
விருந்தாய் உண்பர்,
மக்கா மதீனா
இதற்குப் பொருத்தம்
படிமம்,
அல்லாஹ்ற எழுதிய,
அந்தக் கவிதை,
புதுமை மலிந்த,
புதுக் கவிதை.
ஆ!
அருமை அற்புதம்,
எத்தனை அழகு.

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை அடியில்
சொர்க்கம்,
என்ற
அடி, (இன், இல்)
எத்தனை கோடி
இன் கருவுண்டு
அல்லாஹ் எழுதிய
அந்தக் கவிதை
புதுமை மலிந்த, புதுக்கவிதை.
ஆ!
அருமை அற்புதம்,
எத்தனை அழகு.

●

'ஜிஹாத்' என்ற
தியாக வாழ்வு
'இக்றஹ்' என்னும்
அறிவுக்கீடா?
இல்லை இல்லை,
என்று ஓதும்.
பேனா மையே,
பெரிது பெரிது
என்ற கூற்றில்,
எத்தனை நூறு (ஒளி)
நுட்பம் உண்டு.
நூறு நூறே
நூறும் ஒன்றே,
என்று கூறும்,

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லாஹ்ற எழுதிய,
அந்தக் கவிதை,
புதுமை மிக்க,
புதுக் கவிதை,
ஆ!
அருமை அற்புதம்,
எத்தனை அழகு.

அடுத்தவன் பசிக்க
புசித்தல் ஆகா.
என்ற
கவிதை அடியினை
இன்று
கார்ல் மார்க்ஸ்
ஏங்கல்ஸ்,
கருத்தில் கொண்டு
மூலதனத்தின்
முடிச்சாய் ஆக்கினர்,
'சோவியத்'
என்ற
சொல்லின் உள்ளே.
சபிய்யத்,
என்ற
சொல்லின் பொருளாம்.
உற்று நோக்கின்

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றும் புரியும்.
அல்லாஹ் எழுதிய
அந்தக் கவிதை
புதுமை மிக்க
புதுக் கவிதை.
ஆ!
அருமை அற்புதம்
எத்தனை அழகு.

●

பொறுமை - பூமி
அருமை - முகம்மது
படிமம் - இரண்டும்
ஓதிடும் - ஒன்றே,
இறையும் மறையும்,
ஒன்றினுள் ஒன்று
மறையும் கவிதை,
புரிந்ததா? (க) விதை.
மீண்டும் ஒரு முறை,
இம்மை மறுமை
இரண்டிலும் பெருமை,
ஒருமை இறைவன்,
ஓதிடில் அவனே
அகமது உந்தல், (அகம் - அது)
அனைத்திலும் உண்டு.

---

மருதூர் - ஏ - மஜீத்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்ததா?
சொர்க்கம்
அல்லாஹ் எழுதிய
அந்தக் கவிதை,
புதுமை மலிந்த.
புதுக் கவிதை
ஆ!
அருமை அற்புதம்,
எத்தனை அழகு.

●

நான் மறை வழியும்,
மீன் சினை விதையும்,
ஆமினா அடியும்,
ஓதின
ஒருவன் அவனென,
இதனை,
இப்படி ஓதலாம்,
எல்லாமே அவனென்று
அவன் எழுதிய
இறுதிக் கவிதை - அது
முகம்மது எனும்
புதுக் கவிதை.
ஆ!
அருமை அற்புதம்,
எத்தனை அழகு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓர் அழகிய ஆத்ம தரிசனம்.

அன்னை திரேசா
தந்தை பேடன் பவல்
அதோ!
ஊன்று கோலுடன் காட்சி தருகிறாரே.
மகாத்மா காந்தி
இவர்களைப் போன்று
அன்புடன் மக்கள் மனதில்
பாய்விரித்துப் படுத்துக் கொண்ட
அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரஹாம் லிங்கன்
வீரபுருசன் நெப்போலியன்
போன்றோரையும்
எளிமைக்கு பெயர் போன
ஆட்சியாளர் உமறே பாறூக்
என்போரையும் ஒன்று கூட்டி
ஓர் அமைப்பிற்குள் காணும்
அல்லது நினைக்கும்
ஓர் அழகிய ஆத்மதரிசனமே சாரணன்.
அதனால் நானும் எனை
ஒரு சாரணன் என்று
அழைத்துக் கொள்வதில்
மகிழ்ச்சியடைகிறேன்.
நீங்களும் அப்படியா?
அப்படியாயின்,
இற்றைப் பொழுதின் ஒன்று கூடலில்
எல்லோரும் மகிழ்சியடைவோம்.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையே திரேசா அனையா விளக்கு.

அன்னையே திரேசா,
உங்களுக்கு
சுகவீனம் எனப்
பத்திரிகையில் படித்ததும்
என்னையே நான் மறந்தேன்.

●

உலகின் அன்னையே,
அனைத்துலக
அனாதைக் குழந்தைகளுக்கும்
அன்னையே நீங்கள் தான்
அதனால் உங்களுக்கு
உடல் நலக்குறை
எனப்
பத்திரிகையில் படித்ததும்
என்னையே நான் மறந்தேன்.

●

உலகத்தார் உங்களுக்கு
நோபல் பரிசு தந்தார்கள்
அதனால் உங்களுக்கு
ஒரு கௌரவமும் வந்துவிடவில்லை..

---





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோபல்பரிசுதான் கௌரவம்பெற்றது.
அனைத்துலக மக்களின்
அன்னையே நீங்கள் தான்.
நீங்கள்
கல்கத்தாவில் இருந்து
சென்னை வந்த போது
அவ்வூர்மக்கள்
உங்களுக்கு
உணவு படைத்தனர்.
நீங்களோ,
உணர்வற்றிருந்தீர்கள்.
இது ஏன் என
உசாவிய போது
அங்கு
என் பிள்ளைகள்
உணவருந்தினார்களோ
இல்லையோ?
என நீங்கள்
உணர்ச்சிவயப்பட்டு
அழுததை எண்ணி நான்
அழுகிறேன்.
ஆ!
அன்னையே திரேசா! உலகை,
உங்களின் தாய்மை உணர்வு
ஆண்டாண்டுகாலம்
அழியாது பாதுகாக்கும்.

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணையா விளக்கே
திரேசா
உங்களின்
தாய்மை உணர்வு
உலகை
ஆண்டாண்டுகாலம்
அழியாது பாதுகாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உமறுக்கு ஒரு விழா.

வானத்தின் வெள்ளி
கோதியே அள்ளி
கொண்டுவந்திங்கு
கொட்டியதாரோ?
முத்தமிழ் மன்ற
கம்பளை தாசனா?
என்ற எண்ணம்
தோன்றிடும் வண்ணம்
இங்கு வந்துள்ள
இலக்கிய நெஞ்சங்கள்
கண்டு மகிழ்ந்து
நன்றியும் கூறினேன்.

●

சீறா என்னும்
செந்தமிழ்க் காவியம்
வார்த்தளித்த
வல்லமைப் புலவன்
உமறுக்கொரு விழா
மேற்கிலே என்றதும்
கிழக்கும் வெளுத்தது.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வெளிச்சத்தில்
ஆயிரம் நினைவுகள்
நீண்டு நிலைத்திட
நானிங்கு வந்தேன்.
வந்த என்முன்னே
உமறு தோன்றி,
புள்ள எலக்கா!
புள்ள எலக்கா!
உண்ட
புருசனெங்கே போனதுகா!
கல்லூட்டுத் திண்ணையிலே
கதைத்திருக்கப் போனதுகா.
என்று கவிதையிலே
கவியுரைக்கும்
நாட்டுக் கவித்தாய்
நன் மகன் நீ யன்றோ?
பாடென்றார்.
இம்மென்றால் இரு நூறும்
அம்மென்றால் ஆயிரமும்
அள்ளியெறி
கவிதை முத்து
எந்தன்
ஆசீர்வாதம் உந்தனுக்கு
என்றதும்
பாடலுற்றேன்,
உமறே

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வுகள்
பீறிட்டுப் பாயும்
ஊற்றுக்கண்
கிணறே
உன்னை விடவும்
உன்
எழுத்தாணிக்கு
உணர்வுகள் அதிகம்.
அதனால்தான்
உனை எதிர்க்கவந்த
ஒருவனை
உன் எழுத்தாணி
உமறு குமுறிடின்
அண்ட முகடும்
படீரென்றுடையும்.
என்று நீ உள்ளச்சம் வையும் பிள்ளாய்
என்று கர்ச்சித்தது.
அந்த உணர்வினைப்
பாடலாம்
பல நூறு கவிகளாய்.

●

ஆரவாரக் கடல் மத்தியில்
சிற்றெறும்பொன்று
மூச்சு விட்டது
போலக் கற்றவர்

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் என் கவி
என்றுநீ
அறிவுக் கடங்கிய
அந்த உணர்வினைப்
பாடலாம்
பல நாட்கள்.

●

ஊரும் உலகமும்
போற்றும் உமறே

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூவையும் பாவையும்.

பூ வை
எங்கேயெனில்
தலையில் கழுத்தில்
படத்தில் காதில்.
தவிர,
பூ வை,
வைதால்,
பூவை அழுவாள்.
அவளின் கண்ணீர்,
அத்தர் பன்னீர்,
மெழுகுவர்த்தி வாழ்க்கையே.
பூவை!
பாவை பூவை
இரண்டும் ஒன்றே.
பாவையோ
பூவையோ,
நீ
வையாதே.
பாளிகா என்றாலும்
பூவையே.
அரபியில் சிங்களத்தில்
அவளுக்குப் பெயர் பாளிகா.
அதனால்
நீ அவளை வையாதே.

மருதூர் - ஏ - மஜீத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரிபாடும் புலவன் பாரி போல நீ வாழி.

அத்தி பூத்தாற் போல்
அல்லது,
வட துருவத்தில்
சூரியன் வந்தது போல்
சில வேளை நான்
பட்டணிவேன்.
இது
என் மன மகிழ்வினை
எடுத்துக் காட்டுவதற்கு மட்டுமல்ல,
அதனோடு
''சேர்'' என நான்
அன்போடழைக்கும்
மதிப்பிற்குரிய
கல்விச் செயலாளர்
காதர் முகைதீன் அவர்கள்
என் மனதை
பட்டாகக் காண்பதற்கும்
அவர் மனதை
நான்
பட்டாகக் கண்டதற்கும்
அடையாள அணியே
இந்தப் பட்டணி.
உங்களுக்கும் தெரியும்
இது

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.

உயர்ந்தோர் அணியும்
அணியென்று
இதனை நான் இன்று
உயர்ந்த அணி
வகுப்பு மரியாதையாக
சமர்ப்பிக்கின்றேன்.
நிற்க -
நேற்றுவரை நான்
எங்கள் தலைவர்
எனைப்பார்த்து
புலவன் நீ
புகழ் பாடு என
பணிப்பார் - என
எதிர்பார்த்திருந்தேன்;
பணிக்கவில்லை.
இன்று திடீரெனப்
பேசப் பணித்தார்.
அதுவும்,
இரண்டு நிமிடத்துள்.
கட்டுப்பாடும் கடுமை.
இந்தப் பெரிய மனிதரை
இரண்டு நிமிடத்துள்
அடக்கிப் பேச
அறிவேது இவருக்கு.
தத்தளிப்பார்; தலைகுனிவார்
என்ற எதிர்பார்ப்பா?

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானறியேன்,
நிற்க -
உங்களுக்குத் தெரியுமா?
இவர் என்
அடுத்த வீட்டார்.
அது மட்டுமல்ல,
ஆதியில் இவர் எனது
ஆப்த நண்பர்.
அதன் பின் இவர்
அதிபர், சி. எச். ஈ. ஓ
கல்விச் செயலாளர்
அதனால் இவரைப்பற்றி
உங்களைவிட எனக்கு
அதிகம் தெரியும்.
அதனால்,
உங்களின் ஒருவருடப் பேச்சு
எந்தன்
ஒரு வினாடிமூச்சாகா.
அதுமட்டுமல்ல,
பேச்சுக்குறைந்த
பெரிய மனிதரிவர்
மூச்செல்லாம் செயலான
முழு மனிதர், செயலாளர்
ஏசினால்
இவர் ஏசினால்
தன்னோடிணைக்கிறார்

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதுதான் பொருள்.
அப்படிப்பட்ட
மாபெரிய மனிதரை
நான்
ஒரு வினாடியில் வாழ்த்தி
விடைபெற விழைகிறேன்.

●

பாப்பாடும் புலவன்
பாப்போல நீ வாழி!
ஆண்டாண்டுகாலம்
அணையாது நீ வாழி!
நீண்டு நிலைக்கும்
மக்கள்
நினைவெல்லாம் நீ வாழி!
என வாழ்த்தி
விடைபெற்றேன்.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்களை விட்டு எங்கும் போகக் கூடாது.

ஐயா!
நீங்கள்,
எங்களை விட்டு
எங்கும் போகக் கூடாது.
ஏன் தெரியுமா?
நீங்கள்
இரண்டு நாளைக்கு
இங்கில்லா விட்டால்,
அனேகம் பேர்
இறக்க நேரிடும்.
அதனால் நீங்கள்
எங்கும் போகாது
இங்கேயே இருக்க வேண்டும்.
இது எனது அன்புக்கட்டளை.

●

ஹிந்து, இஸ்லாம்
பௌத்தன், கிறிஸ்தவன்
என்ற இனபேதம்
எள்ளளவுமில்லாத
தூய மனிதர் நீங்கள்.
அதனால்,
இற்றைப் பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரதேசத்தில்
தேவையானதொரு
ஜீவ ஆத்மா. அதனால்,
எங்கும் போகாது
நீங்கள்
இங்கேயே இருக்க வேண்டும்.
தொட்டாலே நோய்தீரும்
மாமனிதர் தேரையர்,
யாக்கூபு, திருமூலர்,
அகத்தியர் போன்றோராய்
அகத்தெடுத்தோம் உங்களையே,
அதனால் நீங்கள்,
பதினெண் சித்தர்களாய்
பதிய வேண்டுமெங்களுடன்.

●

நீங்கள்,
நோயாளிக்கு
ஊசிபோடுவதை
ஒரு பொழுதும் விரும்பவில்லை.
அதன் இரகசியம்தான் என்ன?
இப்பொழுது புரிகிறது
நோயாளி
சிறிய நோவைக்கூட
அனுபவிக்கக் கூடாது
என்ற அந்த இரகசியம்.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயாளி மீது
நீங்கள் கொண்டிருந்த அன்பு
தாயன்பை விட மேலானது.
அதனால்,
உங்களை நாங்கள்
தாய் தந்தை என எண்ணி
தாழ்மையுடன் கேட்கின்றோம்.
எங்கும் போகாது
நீங்கள்
இங்கேயே இருக்க வேண்டும்.
உங்களைச் சுற்றி
எப்பொழுதும்
நோயாளர் கூட்டம்.
அவற்றை நாங்கள்
பணமாக்கிப் பார்த்தோம்.

●

நீங்கள்
பெரிய கோடீஸ்வரர்.
ஆனால் நீங்களோ இன்றும்
லொடலொட காரிலேயே
பயணம், பார்க்கிறோம்.
இதற்குக் காரணம்
ஏழைகளுக்கிரங்கி

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளிக்கொடுத்த
அந்த வள்ளல் தன்மை
ஆ!
அருமை, அற்புதம்.
அதுமட்டுமல்ல,
இந்த மாவட்டத்தில்
எந்த வெளியீட்டிற்கும்
அள்ளிக் கொடுக்கும்
அந்தத் தன்மை
ஆ!
அருமை, அற்புதம்.
அதனால் நீங்கள்
எங்கும் போகாது
இங்கேயே இருக்க வேண்டும்.
என இறைஞ்சினோம்.
நீங்கள்,
நீண்ட ஆயுள்
பெற்றுவாழ
ஆசி வேண்டினோம்.

●

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வற்றாத புலமை வளமுடையோன்.

அன்புடன் அதிபர்
அவருடனே
நண்பர்கள் மாணவர்கள்
பாண்டிருப்பு மக்கள்
எனப்
பண்பானதொரு கூட்டம்
பாடசாலை மண்டபத்துள்
பூத்துக்குலுங்க,
கனகச்சிதமான
கற்பனைகளோடு
நிலாக்களாகவும்,
நட்சத்திரங்களாகவும்
மேகத்தோடு
விளையாடவந்துள்ளீர்!
மருதூர் எனும்
மேகத்தோடு
கானமேகத்தோடு
கவிபாடி
விளையாட வந்துள்ளீர்!
நீங்கள்
இளங்கவிகள்,
நான் இக்கவியரங்கின்
தலைமையேற்றேன்.
எந்தன் தலைமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகுதியா மூப்பா
சபையறியக்
கவிதொடுப்பேன்.
நீண்ட
இடைவெளிக்குப்பின்
கிடைத்த இத்தலைமை
நினைக்க இனிக்கிறது.
என்றாலும்,
இந்த இனிய நினைவு
எத்தனை நாள் நீடிக்கும்.
என்று நினைக்க
நெருப்பிலே விழுந்த
அல்லிமலர் போல் ஆகிறது
இருந்தாலும்,
நான் நான்தான்.
புலமை மிக்க, மருதூரின்
வசைக்கவி
என் வாப்பா
அவர் மகன் நான்.
அதனால்,
வற்றாத புலமை
வளமுடையேன்;
உங்களோடு சேர்ந்து
ஒத்துழைப்பேன்.
இது உங்கள் கவியரங்கு
உருட்டி எறியுங்கள்

மருதூர் - ஏ - மஜீத்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓராயிரம் கவிதைகளைப்
பார்த்தோரும்
பரவசப்பட்டே கட்டும்
உங்கள் கவிதையிலே
வெறும் கற்பனை வேண்டாம்,
உண்மை செறிந்து
உணர்வினைத் தொடட்டும்.
உண்மைக்கருவில்
கற்பனைக்கலர்பூசி
பொருத்தமானஇடத்தில்
பொருத்தமான சொற்சேர்த்து
கவிதை பாடுங்கள்
அக்கவிதை மந்திரமாம்
பாரதிதாசன்
நூற்றாண்டுக் கவியரங்கில்
பாட்டாறு ஓடட்டும்.
அதைக் கேட்டு
பாவங்கள்
பறந்தோடட்டும்.

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழவானத்தின் இலக்கியச் சூரியன்.

அடிவானத்தில்
கீறிய சித்திரம்
அச்சுக்குலையாமல்
இன்றும் இருக்கிறது.

●

சரித்திரம் மாறாமல்
சரித்திரம் படைத்த
ஒரு
சரித்திர புருஷர்
ம. மு. உவைஸ்.

●

ஐம்பத்தாறு
நூல்களின்
தலைப்பாக
ம. மு. உவைஸ்.

●

நாங்கள், ஈழத்தின்
கலை இலக்கிய
நதிக்கரையின்
ஓரங்களில்
கசியும்

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரைத் தொட்டு
எழுதுகிறோம்.
நதிக்குள் இந்த
மேதை இருப்பதனால்.
இந்திய நிலம்
இலக்கிய வியர்வை
சிந்தும் போது
இவர் பெயர் சொல்ல
மறுத்ததில்லை.

●

இராமாயணக் கதை
எழுதிப்பழகிய
இந்தியனாக இருந்தாலும்,
இஸ்லாமிய இலக்கியம் பற்றி
எழுதும்போது
இவர் பெயரை
எழுத மறக்க மாட்டான்.

●

கனவிலே இவர் வருவதும்
அது நீண்டு
நினைவு வரை செல்வதும்
தமிழ் இலக்கியத்திற்கு
இவர் செய்த கைம் மாறுதானோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையாகவே
சிந்திக்கும்
இன்றைய
மனித இயந்திரம்,
இவர்
படைப்பியலில்
தடுக்கி விழுந்து
சத்தியம் என்னும்
தீபத்தை ஏந்திக் கொண்டு
எதிர்கால
சந்ததியினரின்
வாசல்படி வரை சென்று
ம. மு. உவைஸ்
சிறந்த இலக்கியச் சேவகன் என்று
எழுதி ஒட்டிவைத்துள்ளது.

●

எங்களின்
மனச் சுவர்களிலும்
ம. மு. உவைஸ்

●

அடி வானத்தில்
சிறிய சித்திரம்
அச்சுக் குலையாமல்
இன்றும் இருக்கிறது.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கவிதைக்குள் அடங்காத**
**கட்டழகு உங்களுக்கு.**

எங்களின்,
அதி கௌரவத்திற்குரிய,
அன்புள்ளம் கொண்ட மந்திரி,
அப்துல் மஜீத் அவர்களே, உங்களின் கால்கள்,
எங்களூர் மண்ணில் பட்டதும்,
நாங்கள்
பாக்கியம் பெற்றவர்களாக
எண்ணி இன்புற்றோம்.
அன்றலர்ந்த செந்தாமரையாய்
நாங்கள்
ஆனந்தம் கொண்டோம்.
நீங்கள்,
நீண்டகால அரசியல்வாதி
என்பதனாலோ
அதிகௌரவத்திற்குரிய மந்திரி என்பதனாலோ
அல்ல,
அன்புள்ளம் கொண்ட
ஒரு ஜீவ ஆத்மா
என்பதனாலேயே.

●

பல்கலைக்கழக
பட்டதாரிகள்
அரிதான காலத்தில்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டம் பெற்றதை
எடுத்துக் காட்ட
எண்ணியோ மக்கள்
உங்களை
பி. ஏ. மஜீத் என
விரும்பியழைத்தனர்.
இன்று
எத்தனையோ பி. ஏ. க்கள்
இருந்தும் என்ன
கிழக்கிலங்கை மக்களின்
விருப்பமான பி. ஏ.
நீங்களே தான்.

●

அலிப்போடி வன்னியனார்
அருமைச் செல்வமே,
உங்களின்
தங்க உள்ளத்தை
எடுத்துக்காட்டவா
இறைவன்
தங்கத்தையள்ளி
உங்கள்
அங்கமெல்லாம் பூசிவைத்தான்.
ஆ!
கவிதைக்குள் அடங்காத
கட்டழகு உங்களுக்கு.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் வானில் நீங்கள்
சுடுமிக்க சூரியனல்ல,
குளிர்ச்சிமிக்க
வெண்ணிலவு
அதனால்தான்
அனைத்து மக்களும்
சாதிமத பேதமற்று
உங்கள் ஒளியில்
உலா வருகிறார்கள்.

●

மானம் காக்கும்
தொழிலுக்கு நீங்கள்
மந்திரியாம் எனக் கேட்டு
மக்களின் மகிழ்ச்சி ஆரவாரம்
இம் மண்டலத்தையே
அதிர வைத்தது.

●

முப்பத்திமூன்று ஆண்டுகள்
முடிந்தும் முடியாத
உங்களின் அரசியல் வாழ்க்கையில்
செய்த சேவைகளை
எண்ணில்
அடங்கா.
கல்வி, சுகாதாரம்
காணி, மின்சாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடி நீர், வீட்டமைப்பு
பாதைகள், நீர்ப்பாய்ச்சல்
என நீண்டுகொண்டே போகும்.
அவைகளை
படிப்படியாக அடுக்கினால் ஆதம் மலைக்கே
ஏறிச்செல்லலாம்.
சொல்லியடங்கா
உங்கள் சேவைப்பட்டியல்.

●

நிந்தவூர் மக்கள்
நினைவெல்லாம் நீங்கள் நீண்டு நிலைக்க
நினைத்தே வரவேற்றோம்.
நீங்கள்
எங்கள் உள்ளத்தில் பூத்த
ஓக்கிட் மலர்.

●

நிந்தவூர் மக்கள்
இவற்றையெல்லாம்
நினைத்து மகிழ்கிறார்கள்.
அன்பால் உங்களை
அணைத்து மகிழ்கிறார்கள்.
ஆண்டாண்டுகாலம்
நீண்டுவாழ
நினைத்தே வாழ்த்தினார்கள்.
அல் - ஹம்துலில்லாஹ்.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்முனைக் கல்விக்கோட்டத்தின் கண்ணீர் அஞ்சலி.

பால்வடியும், இளமையும்
பண்பான உள்ளமும்
எந்த நேரமும்
இதழ் விரித்துச் சிரிக்கும்
இன்முகமும்.
எப்போதும்
எங்களுக்கிடையே
கலகலப்பாயிருந்து
காரியமாற்றும்
தன்மையும் கொண்ட
அன்பரே! நீங்கள்
அவசரமாக இன்று
நீள் துயில் கொண்டதேனோ?
எங்கள்
நினைவெலாம் பாரமாச்சே!

●

கல்விக் காரியாலயத்தில்,
அல்லது,
அது போல் ஓரிடத்தில்
அல்லது,

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கிருந்தாலும்,
உங்களைச்சுற்றி ஒரு வட்டம்
எப்போதும் இருப்பர்.
காரணம் கேட்ட போது
'பாலா' எங்களுக்கு
'ஏலா' என்றதில்லை
என்றே இயம்பி
இறும்பூ தெய்தினர்.
இன்று அவர்களோ
அழுது புலம்பினர்.

●

தொண்டர்,
ஆசானாய்த் தொடர
நீங்கள்
தோள் கொடுத்துதவிய
தொண்டினை நினைத்து
அந்தோ ! அவர்களும்
கண்ணீர்ப் பூக்களை
உங்களின் கால்களில்
காணிக்கை ஆக்கினர்.
கல்முனைக் கோட்ட
கல்வி அலுவலகத்தில்
'பாலசுப்ரமணியம்'
உதவிக் கல்விப் பணிப்பாளர்
இருந்த இடம்
இன்று

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறிச்சோடிக் கிடக்கிறது.
என்றும் அது
இடைவெளியாகவே இருக்கும்
என நினைந்து
உங்கள் குடும்பத்தோடு சேர்ந்து
நாங்களும்
ஆறாத்துயரில்
மூழ்கி அழுகிறோம்.

●

உங்களின்
கல்முனைக் கல்விக் கோட்ட
கல்விப் பணிப்பாளர்கள்,
இலிகிதர்கள், இன்னும்
ஊழியர்கள்,
அதிபர்கள், ஆசிரியர்கள்
ஆகிய அனைவரும்
உங்களை இழந்து
ஏங்கித் தவிக்கிறோம்.
இனி உங்களை
எப்போது காண்போம்.
உங்கள்
ஆத்மா சாந்திக்காய்
நாங்கள் அனைவரும்
இறைவனை இறைஞ்சுகிறோம்.

---

## அரிது அரிது மந்திரி மன்சூர் மாண்பினைப் பெறுதல்.

அரிது அரிது
என்று தொடரும்
அவ்வைப்பாட்டு
நினைவு வந்ததும்
மந்திரி மன்சூர்
மாண்பது விரிந்து
அவ்வை அரிதொடு
சேர்ந்து வளர்ந்தது.

ஆதம் என்ற
ஆதி மனிதன்
பாதம் பட்ட
சைலான் மண்ணில்
பிறத்தல் அரிது.

அதனிலுமரிது
கண்ணிய நகராம்
கல்முனை நகரில்
பிறத்தலு மாகும்.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்து கலைவி
இறக்கு முன்னே
அந்த நகரின்
அரசியல் களத்தில்
குதித்து வெல்லல்
கோடியில் ஒன்றே.

வெற்றி விருது
கிடைத்த பின்பு
மந்திரிப் பதவி
கிடைத்த லென்பது
அதனிலும் அரிது.

மந்திரி யென்ற
மாண்பு வந்தபின்
மங்கையென்றும்
மதுவே யென்றும்
அலையா திருந்து
அரசிய லொழுக்கம்
பேணிக்காத்தல்
அரிதிலும் அரிது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனிலும் அரிது
கை நனைக்காது
காரியமாற்றுதல்.

இத்தனை அரிதையும்
அடுக்கி வென்று
மாபெரும் மனிதர்
மந்திரி மன்சூர்
என்று நாங்கள்
பெருமையடையலாம்.

பெருமையோடு
போற்றிப் புகழலாம்
அருமை என்றே
வாழ்த்தி மகிழலாம்.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயோன்
# ஆற்றுப்படை

ஊரார், உறவினர்,
மாண்புறு மாணவர்,
வல்லவர், நல்லவர்
என்று எத்தனை
ஈர்ப்புச் சக்திகள்
அவரது உறவில்.

●

வள்ளல் கொடியாய்,
வளர்கிறார் கொழும்பிலே,
என்று கேட்டு
காணச் சென்றேன்
கண்டன கண்கள்
நீண்டன நினைவு.

●

மயோன் என்னும்
அவரது வீட்டில்
ஓடித் திரிந்தனர்
மழலையர் கூட்டம்.
ஓடாதிருந்தது
இறையோன் நாட்டம்.

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு நிறைந்த
அன்னவர் வீட்டில்
சுற்றி இருந்தனர்
மறையோர் கூட்டம்.
வற்றாதிருந்தது
இறையின் தேட்டம்.

●

தாயொடு தனயர்
சகோதரன் மனைவி
மருகர், மைத்துனர்
ஊரார் உறவினர்
என்று அங்கு
எத்தனை உறவுகள்.

●

ஒற்றுமைக் கென்றே
ஒரு கொடி பறந்தது.
அன்பர் கூட்டம்
அனுதினம் விரிந்தது.
நன்மையொன்றே
அங்கு சிறந்தது.

●

செல்வர்க்கழகு
செழுங்கிளை தாங்குதல்.
கற்றோர்க்கழகு

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்படி நிற்றல்
வீரர்க்கழகோ
வீடு நற்பேறே.

●

வீரம், கல்வி
செல்வம், என்று
அன்னவரோடு
அணைந்த அழகு
எண்ணி மகிழல்
எந்தன் அழகே.

●

கட்டியணைத்து
உண்மையே பேசி
கலையது வளர
ஆசியே கூறி
வழியது வரைக்கும்
வந்தெனை அனுப்பினை.

●

அனுப்பிய உந்தன்
அன்பது அற்புதம்
மீண்டனை நீயோ
மீண்டிலை மனத்தில்
நீண்டது உந்தன்
நினைவது எங்கும்

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைக்குத் தேர் கொடுத்தல்
செத்தும் கொடை கொடுத்தல்
அடையா நெடுங்கதவால்
அள்ளிக் கொடுத்தல்
என எத்தனையோ
கொடுப்பனவுக் கோலங்கள்.

●

கண்டிவரை என் பின்னால்
கம்பனொடு அவ்வை,
ஆசாரக் கோவை அப்துல் மஜீத்,
படிக்காசுப் புலவன்
எனப் பல பேர்
ஓடி வரும் சப்தம்.

●

கல்விக்கு உயிரளிக்கும்
கல்முனை சாஹிரா,
மஃமூத் பாலிகா,
அல் - ஜலால், அல் - மிஸ்பாஹ்
என்று எத்தனை
அதிபர்கள் என் முன்னால்.

●

ஆற்றுப்படுத்தி
அனுப்பி விட்டு
உன்னஸ் கிரிக்கு

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து சேர்ந்தேன்.
எத்தனை திருப்தி
எந்தன் மனத்தில்

●

உடலைத் தழுவிய
அவ்வூர்க் காற்று
முக்கனி முகம்பது
முஸ்தபா வள்ளலின்
தன்மையைச் சொல்லியே
தழுவிச் சென்றது.

●

இத்தனை மகிழ்வொடு
மருதூர் வந்து
''ஏழேழு தலைமுறை
ஏற்புடைத்தாகுக
பாட்டை எழுதி''
ஏட்டில் சேர்த்தேன்.

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இனிய
# மின் மினியே!

ஆண்டு ஐம்பதுகளில்
அதுவும் ஒரு வெள்ளிக்கிழமை,
இரவாகும் வேளை
இலேசான மழைத் தூற்றல்.
வந்த இரவை
ஈரலிப்பு வரவேற்று
அள்ளியணைத்து
அகம் மகிழ்ந்தது.

●

எங்களூரில்
அப்பொழுதெல்லாம்,
மின்சாரம் இல்லை,
பாவனையில் இருந்த
குப்பி விளக்கு
குருட்டு வெளிச்சத்தை
ஆள மட்டும்
கொடுத்து மகிழ்ந்தது.

●

அந்த வெளிச்சத்தில்
நான் படித்தேன்.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தர காண்டம்
மிதிலைக் காட்சி
மூன்று பாட்டு
நெட்டுருப் பண்ணி
நிமிர்ந்த வேளை
சிந்தை மகிழ்ந்தது.

●

எதிரே இருந்த
மல்லிகை மரத்தில்
மின் மினியொன்று
ஒளியை உமிழும்
அற்புதக் காட்சி
விட்டு விட்டு
வந்த ஒளியில்
எண்ணம் விரிந்தது.

●

அருகே சென்று
பொத்திப் பிடித்து
இருட்டு நோக்கி
எடுத்துச் சென்று,
தொட்டுப் பார்த்தேன்
விட்டுப் பார்த்தேன்
எத்தனை கவர்ச்சி
இன்பக் கிளர்ச்சி.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்தல் விட்டு
மின் மினியுடனே
இருட்டில் இருத்தல்
எத்தனை மகிழ்ச்சி
பயத்தால் மின்மினி
அதிர்ச்சியானதா?
உசும்ப மறுந்துக்
கிடத்தல் கண்டேன்.

●

இதனைக் கண்ட
எனது தாயார்
''படிப்பைக் கெடுக்கும்
சைத்தான் வேலை
பரீட்சை நெருங்குது
படியும்'' என்று
அதட்டி அகன்றார்.
படிப்பைத் தொடர்ந்தேன்.

●

ஆண்டது தொண்ணூறு
அதுவும் ஒரு வெள்ளிக்கிழமை,
இரவாகும் வேளை
இலேசான மழைத் தூற்றல்,
வந்த இரவை

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏரலிப்பு வர்வேற்று
அள்ளியணைத்து
அகம் மகிழ்ந்தது.

●

எங்களூர்
இப்பொழுதெல்லாம்
மின் ஒளியில்
இரவு பகலாம்.
அதனால் இங்கு
மின் மினி வருவது
அபூர்வம் அரிது
காண்பது கஷ்டம்.

●

வந்தாலும் எனக்குத்
தெரிவதும் இல்லை.
தெரியக்காரணம்
எதுவுமே இல்லை.
எந்தன் கையில்
சத்திய சோதனை
படித்து நிமிர்ந்தேன்.
அதிர்வு மனத்தில்.

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரன் படிக்கும்
அறையின் பக்கம்
மின் மினி யொன்று
அழகை அள்ளி
உமிழ்ந்து சென்றது.
எந்தன் மனத்தில்
இன்பம் இல்லை.
என்ன நடந்தது?

●

மின் மினிப் பரம்பரை
விளையாட்டிதுவா?
ஐம்பதில் வந்த
மின் மினித் தொடரின்
பேத்தியா? மகளா?
பேரனைக் கெடுக்கும்
சோதனை இதுவா?
என்ன நடந்தது?

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ் மாலை உந்தனுக்கே.

"அல்லாஹ்" என்றன்
கருணைக் கடலே
அனைத்தும் நீயே
சமத்தனும் நீயே
அடிமையெனக்கு,
உரிமையே இல்லை,
அளந்து கூறும்
தகுதியும் இல்லை.

●

உந்தன் படைப்பில்
எத்தனை கோலம்
கோடி கோடி
அதனிலும் கோடி
எண்ணில் அடங்கா.
இருந்தும் என்ன?
உயிரின் அமைப்பு
ஒன்றே யெனலாம்.

●

யானையை அரிந்து
எறும்பளவாக்கினால்
ஆயிரக் கணக்கில்

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அள்ளியெடுக்கலாம்
இரண்டும் உயிரே
என்றவகையில்
மாற்றம் காணல்
மனுவால் முடியுமா?

●

காட்டில் சிங்கம்
கடலில் திமிங்கிலம்
மரத்தில் பறவை
மலையில் பாம்பு
தரையில் மனிதன்
கரையில் நண்டு
எங்குபார்க்கினும்
சக்தியொன்றே.

●

அனைத்திலும் நீயே
வினைத்திறன் உன்னதே,
படைப்பினம் யாவையும்
படைத்தவன் நீயே,
நீயே நித்தியன்
நீயே சத்தியன்
நீயே எல்லாம்
நீயே அல்லாஹ்.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

பகலில் வருவது நினைவு
இரவில் வருவது கனவு
இரண்டும் இணைந்த உறவு
அமைச்சர் அஸ்வர் நிகழ்வு.
இந்த நிகழ்வின் முடிவு
கலைஞர்க் கெல்லாம் விடிவு.

●

அந்த விடிவினூடே
இயல், இசை, நாடகத்தை
இலக்கிய ஊடகத்தை
ஊக்கிய நல்மனத்தை
வாழ்த்துவோம் கலைமனத்தால்
வாழ்கவே இறைமனத்தில்.

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டுடைத் தலைவன்
# றணசிங்க பிரேமதாச
# பத்துப்பாட்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன்வீடு

- பாட்டாளி வர்க்கத்தின் பாட்டே
உனைப் பாடாமல் இருக்க முடியுமா?

- இருபதாம் நூற்றாண்டின்
இலக்கியமே வருக!
உன் வரவு நல்வரவாகுக.

- உழைப்பாளி மக்களுக்கு
இறையளித்த
உயர்ந்த பரிசு.

- கண்ணன் போல்
நீயும்
காலமெல்லாம் வாழ்வாய்.

- வாடிய தாயைக் காத்த
வள்ளலே வாழ்க என்போம்.

- மாணவர் சமுகம்
மறவாது உனையென்றும்

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● சாதாரண மனிதன்
சரித்திரமானாய்.

● மூவேந்தர் முடிபோல்
ஆண்டாண்டுகாலம்
அமையக் கடவாய்.

● ஏழேழு தலைமுறைக்கும்
ஏற்புடைத்து உன்னினைவு

● பசியையழிக்கக்
கூண்டு செய்த
பக்குவஞானி
நீ ஒரு
சமூக விஞ்ஞானி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாட்டாளிவர்க்கத்தின் பாட்டே உனைப்பாடாமல் இருக்க முடியுமா?

எல்லோர்க்கும் தலைவ,
என்னிதய நண்பனே,
ஏழைகள் இதயத்தில்
என்றும் இடம் கொண்ட,
ஏந்தலே வருக!
உன் வரவு
நல்வரவாகுக.

●

ஆட்சியில், அரசியலில்
சாதனைகள் பல புரிந்த
சாணக்கியனே,
உனை நான்
அரசியலுக்கு அப்பால் நின்று,
அலசுகிறேன்.
அதன் பின்
மாபெரிய மனிதனென்று
வாழ்த்துப் பா, பாடுகின்றேன்.

●

இன்று உன் கால்கள்
எங்கள் மண்ணில் படுவதனை,

---

பனவர்க கூதலும் சந்தனப் போர்வையும்.

கண்ணியமாய்க் கருதுகிறோம்.
பாட்டாளி வர்க்கத்தின் பாட்டே,
உனைப்பாடாமல் இருக்க முடியுமா?
மரபுக் கவிதைக்குள்,
மரபாக இருந்த நீ,
இன்று,
புதுக் கவிதைக்கும் பொருளானாய்.
இளைஞர்கள் உனை ஏற்றுக்கொண்டனர்.
அதனாலுனை
இலங்கையின், எம். ஜி. ஆர்.
என்றே ஏற்றினர்.

●

உழைப்பிற்கு உதாரணம் தேனீ.
அது நீ,
போகுமிடமெல்லாம்,
அமைக்கும் கூடு
ஏழைகள் வாழும் வீடு,
அது கண் கூடு.
அதனால்,
உலகெலாம் உன்குரல்,
ஒலிக்கிறது.
நம் நாட்டின் பண்பை,
அது பிரதிபலிக்கிறது.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலவர்கள் உனை
புரவலன் என்பர்.
ஏழைகள் உனை
ஏந்தலே என்பர்.
உழைப்பால் உயர்ந்த உத்தமனே!
நீ,
ஓதற்கரியனாம்.
அதனால்,
மண்ணில் உன்புகழ்,
மடியாது ஒரு போதும்.

●

அன்றில் போல் ஹேமாவுடன்
ஆலமெலாம் பறக்கும்
அந்த அழகு, ஆ! அருமை.
என்றும் அப்படியே இருந்திட
எங்கள் இதய ஆசிகள்.

●

எங்களூர் கடற்கரை மணல் போல்,
காலம் காலமாய்
எண்ணற்ற நாட்கள்
இருந்து நீ வாழி.
கட்டித் தயிரை,
வெட்டி வைத்து,
தேன் விட்டு,

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெவிட்டாத
தீங்கனியும் சேர்த்து
உண்ணத் தந்து
மீன்பாடக் கேட்கவைத்து
குரவையிட்டு குதூகலித்து,
ஆராத்தி எடுத்து
ஆதரிக்க ஆசையுண்டு
என்ன செய்ய
போதா (மே) (த) காலம்,
பொறுத்திருப்போம்.
வாழ்க உன் புகழ்,
வளர்க உன் நாமம்.

---

மருதூர் - ஏ - மஜீத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இருபதாம் நூற்றாண்டின்
இலக்கியமே வருக,
உன் வரவு நல்வரவாகுக.**

பெருந்தகையீர், நீங்கள்
பிரதமராய் வந்தபோது
அந்தச் சிறுமி பாத்திமா பர்சானா,
'வெற்றித் திருமகன்'
நீங்களென்று
ஆடிப்பாடி
ஆசீர்வதித்தாள்.
நானோ உங்களை
அரசியலுக்கு அப்பால் நின்று அலசி
மாபெரிய மனிதனென்று.
வாழ்த்துப் பா பாடினேன்.
இன்று நானுனை
காவியத் தலைவனாய்
காண்கின்றேன்.

•

இன்றைய உங்கள் வரவு
எம்மூர் மனத்தில்
என்றுமே மறவாத ஒரு நிகழ்வு.

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந் நிகழ்வின் ஒளி வெள்ளத்தில்
மன்சூரைக் காணவந்தனையோ?
பல சூறுக்குத் தாக்குப் பிடித்த
மன்சூரைக் காண வந்தனையோ?

●

மக்கள் உனைக் காணும் தோறும்
மகா பராக்கிரமபாகு (நீங்கள்)
என நினைக்கிறார்கள் (மன்னன்)
மகாபராக்கிரமபாகு
என நினைக்கிறார்கள்.

●

ஓர் அவதாரத்தில்
தச அவதாரம் கண்டவர் (நீங்கள்)
தொண்டனாய், தோழனாய்,
தன்னிகரில்லாத் தலைவனாய்,
வறுமையை ஒழிக்கும் வள்ளலாய்,
அறிவில் சிறந்த ஆசானாய்,
நாடாளுமன்றத்தில்
நல்லதொரு பிரதிநிதியாய்,
நகரசபை அங்கத்தவனாய்
மந்திரியாய், பிரதம்ராய்,
மக்கள் ஜனாதிபதியாய்,

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைக்கும் அப்பால்
மாபெரிய மனிதனாய்
நான் உங்களைக் காண்கிறேன்.

●

பாட்டாளி வர்க்கத்தின்
பாட்டே! நீங்கள்,
ஆப்பிரகாம் லிங்கனுக்குப் பின்.
அவதரித்த ஆப்பிரகாம் லிங்கன்
அந்த மனிதனைப் போல் நீங்களும்
மாபெரிய மனிதன் தான்.
அதனால் உங்களை மக்கள்
'எங்கள் லிங்கன்'
என அழைக்கிறார்கள்.
லிங்கனைப் போல்
மக்கள் (உங்களை) படிக்க
நினைக்கிறார்கள்.
அதனால் நான் உங்களை
இருபதாம் நூற்றாண்டின்
இலக்கியமாய்
படைக்கவிரும்புகிறேன்.

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழைப்பாளி மக்களுக்கு இறையளித்த உயர்ந்த பரிசு

அன்று இரவும்,
அதற்கு முன்னிரவும்
எங்களூரில் அடைமழை.
விடிய,
வானம் புத்தரின்,
வடிவான முகம் போல்,
பளிச்சென்றிருந்தது.
அவ்வேளை
அழகான வரிகொண்ட அணிலொன்று,
ஆனந்தத்தால் அங்குமிங்கும்,
தத்திப் பாய்ந்து, பின்
கொய்யாக்கனி கோதித் தரித்தது.
மாமரத்தில் குயிலொன்று,
தனியனாய் இருந்து,
கூவிக்களித்தது.
எதிரே,
தந்திக் கம்பத்தில்
மீன் கொத்திப் பறவையொன்று,
இசை மீட்டி இன்புற்றது
இத்தனைக்கும் எனக்கு
எதுவுமே புரியவில்லை.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாலை பள்ளி விட்டெழுந்து
பள்ளி சென்று தொழுதுவிட்டு வந்து,
அன்பு மனைவி தேன், நீருக்காய்
அழைக்கும் வரை,
வானத்தையும், அணிலையும்,
வண்ணக் குரல் கொண்ட குயிலையும்,
மீன் கொத்தி இறகினையும்,
இரசித்த வண்ணம்,
இன்புற்றிருந்தேன்.

●

அழகானதோர் காலை
அருமை, அழகு, ஆனந்தம் என,
என் அடி மனத்திலோர் அங்கலாய்ப்பு,
கார் முகில், கூட்டம் கூட்டமாய்,
எங்கே போகிறது?
எங்கு போனால்தான் எனக் கென்ன?
முகிலோடு ஊடல் முடிவதற்குள்,
அருகே இருந்த வானொலியில்,
காலைச் செய்தி,
அதி கௌரவ றணசிங்க - பிரேமதாஸ
இன்று கண்டியிலே,
எண்கோண மண்டபத்தில்,
'ஜனாதிபதி' பதவியேற்பார்.
என அறிவித்தது.

---

பன்னீர் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தம் என்னைக் கிள்ளிவிட,
துள்ளி எழுந்தேன்.
அணிலும் குருவியும், அந்தக் குயிலும்,
ஆனந்தம் கொண்டதன்
அர்த்தம் புரிந்தது.
கார் முகில் கூட்டமும்,
கண்டிக்கே ஏகியதா?
முகிலிடம் வாழ்த்தனுப்ப,
முடிந்திலையே ஆ! என் செய்வேன்?
கற்பனைப் பந்தலிலே
கண்ணயர நினைக்கின்றேன்.
காலமோ பின்னோக்கி நகர்கிறது.

●

ஆண்டது எழுபத்தினான்கு,
கொழும்பு கெஹல் வத்தையில்,
என் பாடசாலை.
அதனருகே உன் வீடு.
அதிபர் என்ற வகையில்,
அடிக்கடி உன்னிடம், நான் வருவேன்.
ஆதரிப்பாய்.
அன்பு, அடக்கம், அறிவு,
அத்துடனே ஆளுமை,
அனைத்துக்கும் மேலாக,
அதிகாலை எழுந்து,
கருமமாற்றும் கச்சிதம்,

மருதூர் - ஏ - மஜீத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருக்குழைக்கும் உணர்வு,
என எத்தனையோ,
நற் பண்புகள் உன்னிடத்தில்,
ஒளிர்வதனை நான் காண்கின்றேன்.
கற்பனைப் பந்தலின் கீழ்
கண்ணயர்ந்து எழுகின்றேன்.

●

எண்ணத்தேன் சொரிகிறது
பிரதமராய் எமதூர் வந்து,
அலங்கார மேடையேறி,
தேர்தலிலே வெற்றி பெற்று
திரும்பி வருவேன்;
மருதூர் மக்கள் நன்றிமறவேன்,
என்ற வார்த்தை, இன்னும் இனிக்க
பதவியேற்பு, பறந்து வந்தது.
உண்மையில் 'ஜனாதிபதி'
உங்களுக்கு இறையளித்த,
உயர் பதவி
உழைப்பாளி மக்களுக்கு, இறையளித்த
உயர்ந்த பரிசு,
அதனால் நீங்கள், மகிமை பெற்றீர்,
உயிர்களனைத்துமே,
உங்களைப் போற்றும்,
நன்றாம் என்றே, நானிலம் வாழ்த்தும்.
வாழ்க உன் புகழ்,
வளர்க உன் நாமம்.

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணன் போல் நீயும் காலமெலாம் வாழ்வாய்.

பாரதத்தில்,
மகா பாரதத்தில்,
மாபெரியன் கண்ணன்.
எண்ணில்,
இலங்கையில்,
நவ இலங்கையில்
மாமனிதன் (பிரேமா) நீயே.

●

ஆயர்கள் மத்தியில் அவர் பிறப்பு,
ஏழைகள் மத்தியில் உன் பிறப்பு.

●

பாரதத்தில் ஐவர்கட்சிக்கே அவர்
இலங்கையில் ஐக்கிய கட்சிக்கே நீ.

●

பக்தர் மதிக்கும் பிரான்,
கண்ணபிரான்.
மக்கள் மதிக்கும் பதி நீ
ஜனாதிபதி.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு, சீலம், கருமத்தில்
சிறப்புடையன் கண்ணன்.
நீயும் அச்சாயல் படிந்த வண்ணன்.

●

வண்ணத்தில் அவர் இமயம் (என்)
எண்ணத்தில் நீயும் அப்படியே.

●

ஆயர்க்கு அருளியவர் கண்ணன்,
நீயோ,
சேரி ஒழித்த செங்கையன்

●

திரௌபதி இன்னல் என்ற போது
திரையாக வந்தவன் கண்ணன்.
இலங்கை இன்னலுற்ற போது,
இரங்கியவன் நீயே.

●

கண்ணன் போல் நீயும்
காலமெல்லாம் வாழ்வாய் (என்)
எண்ணம் போல் நீயோ
என்றுமே வாழ்வாய்.

---

பன்னீர் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாடிய தாயைக்காத்த**
**வள்ளலே வாழ்க என்போம்,**

உத்தமரே பிரேமா உங்கள்,
உறவெல்லாம் கலைஞர்தாமோ?
உணர்வெல்லாம் கவிதையாமோ?
எதுவென்போம் உங்கள் நாவை
கலையென்போம் உங்கள் வாழ்வை.

பட்டத்தை அளித்து எங்கள்,
பாங்கினை உயர்த்திவைத்தாய்.
இல்லத்தை அளித்து எங்கள்,
இதயத்தைக் குளிரவைத்தாய்.
அரங்கது அமைத்து எங்கள்,
ஆக்கத்தை அழகு செய்தாய்.
வாடிய தாயைக் காத்த,
வள்ளலே நீயே என்போம்.
சரஸ்வதி தாயைக் காத்த,
தனயனோ உன் போலில்லை.
கலைகளைக்காத்த உத்தன்
கண்ணியம் போற்றும் ஏடு.

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாடிய தாயைக்காத்த**
**வள்ளலே வாழ்க என்போம்,**

உத்தமரே பிரேமா உங்கள்,
உறவெல்லாம் கலைஞர்தாமோ?
உணர்வெல்லாம் கவிதையாமோ?
எதுவென்போம் உங்கள் நாவை
கலையென்போம் உங்கள் வாழ்வை.

பட்டத்தை அளித்து எங்கள்,
பாங்கினை உயர்த்திவைத்தாய்.
இல்லத்தை அளித்து எங்கள்,
இதயத்தைக் குளிரவைத்தாய்.
அரங்கது அமைத்து எங்கள்,
ஆக்கத்தை அழகு செய்தாய்.
வாடிய தாயைக் காத்த,
வள்ளலே நீயே என்போம்.
சரஸ்வதி தாயைக் காத்த,
தனயனோ உன் போலில்லை.
கலைகளைக்காத்த உந்தன்
கண்ணியம் போற்றும் ஏடு.

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னது மெய்யென்றோதி,
சொர்க்கத்தின் கவிதை பாடு.
செந் நெல்லும் மீனும் உந்தன்
செழுமைக்கு சான்று கூறும்.
செம்மலே வாழி வாழி,
செழுமையாம் கலைகள் வாழி.
வாழி நீ வாழி வாழி,
வழி வழிக் கலைகள் வாழி.

---

பன்னீர்க் கூதிலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர் சமூகம் மறவாது உனையென்றும்

பார் போற்றும்,
கொழும்புப் பட்டிணத்தில்,
பகலெல்லாம் உழைத்து,
உருக்குலைந்து
படிப்பதற்கு நேரமற்று,
திரிந்த பிள்ளைகளை,
ஒன்று சேர்த்து
இரவிலே பாடசாலை,
என அமைத்து
கல்விதனைக் கொடுத்த,
கண்ணியவான்,
ஆசான் நீங்கள்.
அதன் தொடரா இன்றும்?
மாணவர்க்கு மதிய உணவு,
பாடநூல், சீருடைஎன
உன் மனத்தில்,
எப்போதும் நல்லெண்ணம்.
ஏழைகளை உயர்த்தல்,
என்பதுவே இலட்சியமா?
மாணவர் சமூகம்,
மறவாது உனையென்றும்,
கல்வியின் காவலனாய்,
கருதுவர் என்றென்றும்.

---

மருதூர் - ஏ மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழைமேகம் உந்தன்,
மறு பெயரோ நானறியேன்,
பள்ளம் மேடு,
பார்க்காது பெய்கின்ற,
மழைமேகம் உந்தன்,
மறு உருவோ நானறியேன்.
பிறர் பிள்ளை தலை தடவ,
தன் பிள்ளை தான் வளரும்
தாற்பரியம் பொய்யல்ல,
மெய்யாக உன் குடும்பம்,
மேதினியில்தான் வாழ,
வாழ்த்துக்கள் பாடுகிறேன்.
உன்னோடு சேர்த்து,
உன் குடும்பம் தான் வாழ,
வாயார வாழ்த்தி,
வாழ்த்துக்கள் பாடுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதாரண மனிதன் சரித்திரமானாய்.

கடவுள் கண்ணன்,
பத்துத் தடவை,
மனு உரு எடுத்து,
மனிதனைக் காக்க,
உதவியதாக,
ஹிந்து வேதம்,
எடுத்துக் கூறும்.
எந்தவேதமும்
எடுத்துக்கூறும்,
வண்ணம் செய்த,
வழி மகன் நீயே!
ஒரே ஒரு தடவை,
மனிதனாய்ப் பிறந்து,
அதனுள் பத்து
அவதாரம் கண்டாய்.
மண்ணில் எண்ணில்,
மாபெரு மனிதன்,
நீயே என்பேன்.
சாதாரண மனிதன்,
சரித்திரமானாய்.

---

மருதூர் - ஏ - மஜீத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணில் ஒன்றில்,
ஏழைக்குடிமகன்.

●

அதன் பின் நீயோ,
அறிவுடை ஆசான்.

●

மூன்றில் தொண்டன்,
முழுநேர ஊளியன்.
கட்சியென்றே,
கஷ்டப் பட்டாய்.

●

நான்கில் நீயோ,
நல்லதொரு கலைஞன்.
படைக்கும் ஆற்றல்,
படைத்தவனானாய்.

●

ஐந்தில் உனக்கு,
அங்கத்துவம் நகரசபையில்

●

அடுத்து என்ன?
நாடாளுமன்றம்,
நன்மை செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னைக் கண்டு
உணர்வு பெற்றது.

●

எழில் நீயோ,
மந்திரிக்குதவி.

●

எட்டில் எட்டா
மந்திரிப் பதவி.

●

அதன் பின் பிரதமர்,
அடுத்து என்ன?

●

பத்தும் பெற்ற
பாட்டுடைத் தலைவன்.
ஜனாதிபதி
நீயேயென்று
வாழ்த்துப் பாடி
வாழ்த்த நினைத்தேன்.

●

மக்கள் போற்றும்,
வண்ணம் வாழ்வாய்.

---

மருதூர் - எ - மஜீத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மூவேந்தர் முடி போல்
ஆண்டாண்டுகாலம்
அமையக் கடவாய்.**

சொல்லிட முடியா
நன்னெறி மகனே,
மாணிக்கத் தீவின்,
மாண்புறு புதல்வ!
நீயெனை
மாற்றான் தாயென்று
மதியாது விட்டிலையே,
ஏந்தலே!
உனை நான்,
என்னென்று புகழ்வேன்?
என்றென்றும் மறவேன்.
அனேகருக்கு நான்
அருகிருத்தி அமுதூட்டினேன்.
ஆராரோ என
தாலாட்டுப் பாடினேன்,
அவர்களெனை,
அடியோடு மறந்து விட்டனர்,
பம்மாத்தாய்ச் சிலர்,
பல்லைக் காட்டினர்.
ஆனால் நீயோ,

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி மறவர் நல்ல பிள்ளை.
அபயம் என்ற போது,
அன்போடணைத்தாய்.
அருள்செய்தாய்.
சொந்தத் தாய் போல்,
அருகிருத்தி,
ஆதரித்தாய்.

●

சம அந்தஸ்தளித்தாய்,
சங்கத்திருத்தி,
சங்கை செய்த,
மூவேந்தர் முடிபோல, உன்னாட்சி,
ஆண்டாண்டுகாலம்
அமையக் கடவாய்.
உனை வாழ்த்தாத,
புலவனும் புல்மையும்,
இருந்தும் இல்லாமையே.
என்ற என் எண்ணம்,
என்றுமே நிலைக்கும்.
என்றும் நீயென்,
பிள்ளையென்பேன்,
நன்றி கூறி,
நானுனை வாழ்த்தினேன்.
நானிலம் போற்ற,
நானுனை வாழ்த்துவேன்.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஏழேழு தலைமுறைக்கும்**
**ஏற்புடைத்து உன்னினைவு.**

பொதுவுடமை சமதர்மம்,
எல்லோர்க்கும் எல்லாம், இவைகள்,
அழகான சொற்கள்.
அர்த்தமும் கொண்டவைதான்.
ஆனால் அடக்கமில்லாதவை.
அதனால்,
உலகெலாம் அலையும்
தன்மை இதற்குண்டு.
அரசியல் வாதிகளும்,
ஆத்மீகத்தலைவர்களும்,
இதனை அடக்க நினைத்து
அடங்கினர் இதனுள்.
சில வேளை,
சில இடங்களில் இது,
வானவில்லின்
வர்ணஜாலம் போல்
தோன்றி மறைந்ததும் உண்டு.
கார்ல்மார்க்ஸ், ஏங்கல்ஸ்,
கனவுலகச் சொற்கள் இவைகள்.
ரஷ்யாவிலும் சீனாவிலும்,
அடங்கின இவைகள்.
இன்று எங்கள்

பன்னீர்க் கூதலும் சந்தனம் போர்வையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி பிரேமாவிடம்,
அடக்கமாயின, இவைகள்.
காரணம்,
பிரேமா இவைகளைக் கண்டு,
அஞ்சாது அணைத்து, உறவாடி,
குணசிங்க (வோடு) புரத்தில் குடியிருந்து,
போராடாமலே,
பொழுதினை விடியச் செய்தார்.
அந்த விடிவிற்குள், வறுமை ஒழிக்கும் 'ஜனசவிய'
எல்லோர்க்கும் வீடு 'செவன'
மாணவர்க்குப் போஷாக்கு,
அத்தோடு, அசரண சரண,
எனப் பலப்பல இனிய திட்டங்கள்,
இதனால், பொதுவுடைமைத் தத்துவங்கள்
இவரிடம் மண்டியிட்டன.
எல்லோர்க்கும் உடைமை, உண்டானால்,
எதற்குப் பொதுவுடைமை?
ஆழ்ந்து பார்த்தால்,
அர்த்தம் உள்ளதுதான்,
கார்ல்மாக்ஸ் கனவை
நனவாக்கிய நாயகன் நீ.
ஏழேழு தலை முறைக்கும்
ஏற்புடைத்து உன்னினைவு.
பாரேழும் பாடுவதற்கு
பண்புடைத்து இந்நினைவு.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசியை அழிக்க குண்டு செய்த பக்குவ ஞானி
## நீ ஒரு சமூக விஞ்ஞானி.

எதைச் செய்தாலும்,
எதனை எடுத்தாலும்,
அதனை,
கன கச்சிதமாய்ச் செய்யும்,
ஆற்றல் படைத்தவர் நீங்கள்.

●

எதைச் செய்தாலும்,
எதனை எடுத்தாலும்,
அதனை,
கனகற்சிதமாய்ச் செய்யும்,
ஆற்றல் படைத்தவர் நீங்கள்.

●

அரசியலில் ஆத்மீகத்தில்,
இலக்கியத்தில், இன்னியலில்,
என்று,
எதை எடுத்தாலும்,
எதனைச் செய்தாலும்,
அதனை,
கனகச்சிதமாய் செய்யும்,
ஆற்றல் படைத்தவர் நீங்கள்.

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிந்த உலகில்,
பரந்த அறிவொடு,
வாழ்ந்த பெரியோர்,
போன்று வாழும்,
ஆன்றவிந்தடங்கிய,
கொள்கைச் சான்றோன் நீங்கள்.

●

எதைச் செய்தாலும்,
எதனை எடுத்தாலும்,
அதனை,
கன கச்சிதமாய்ச் செய்யும்,
ஆற்றல் படைத்தவர் நீங்கள்.

●

உலகை அழிக்க குண்டு செய்த,
விஞ்ஞான உலகில்,
பசியை அழிக்க குண்டு செய்த,
பக்குவ ஞானி - நீங்கள்.
எதைச் செய்தாலும்,
எதனை எடுத்தாலும்,
அதனை,
கன கச்சிதமாய்ச் செய்யும்,
ஆற்றல் படைத்தவர் - நீங்கள்.

---

மருதூர் - ஏ - மஜீத்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கிய வீட்டை, அழித்த பசியை
பார்த்துப் படிக்க,
பாரில் உள்ளோர்,
பலரும் வருகிறார்.
வருவோரழைத்து,
வாழ்த்துக் கூறி,
வெள்ளரசும்
வேதமாம் பௌத்தமும்,
சொல்லிக் கொடுத்து,
அனுப்பும் போது,
சக்கரவர்த்தி,
அசோகன் - நீங்கள்.

●

எதைச் செய்தாலும்,
எதனை எடுத்தாலும்,
அதனை,
கனகச்சிதமாய்ச் செய்யும்,
ஆற்றல் படைத்தவர் - நீங்கள்.

●

அதனால் நீங்கள்
இன்று போல் என்றும்,
இனிதே வாழ,
வாழ்த்துப் பாடினேன்.
வாழ்க, உன்புகழ்
வளர்க உன் நாமம்.

நன்றி.

---

பன்னீர்க் கூதலும் சந்தனப் போர்வையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தின் நிலவு
வண்ண மலர்
ஏனத்தின் சாரம்
இன்னமுது
மோனத்தின் கனவு
முகிழாது
ஞானத்தின் ஒளியே
அதுவாகும்.

இந்நூலின் கடைசிப் பக்கம்.
வேறு ஒரு நூலின் முதற் பக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொட்டுக்கள்

- மத்திய கிழக்கில் இருந்து
மட்டக்களப்பு வரை.
(ஆய்வியல்)

- பனித்துளி பட்டுக்
கருகிய மொட்டு.
(தமிழியல்)

- கண் சிமிட்டிய
நட்சத்திரங்கள்.
(அறிவியல்)

- இளமையின் இரகசியமும்
நீடித்த ஆயுளும்.
(அறிவியல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்கள்

- பன்னீர் வாசம்
  பரவுகிறது.
  (சிறுகதை)

- மறக்க முடியாத
  என்
  இலக்கிய நினைவுகள்.
  (கட்டுரை)

- இஸ்லாத்தைப் பற்றி
  இதர மதத்தவர்கள்.
  (தொகுப்பு)

- பன்னீர்க் கூதலும்
  சந்தனப் போர்வையும்.
  (கவிதை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியம்: சி. ருத்ரா.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மருதூர் - ஏ - மஜீத்

சாய்ந்த மருதூர் கல்முனை

ஸ்ரீலங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org